Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 324 புரட்டாசி. September. 2023

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

29TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
33 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# இலங்கை வரும் சீனக் கப்பல்கள்

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி



அவள் நல்லாப் பிட்டவிப்பாள்

குறும்படம்
"எழுதாத கவிதைக்கு முதல் பரிசு"
24.09.2023
தமிழர் அரங்கம் Dortmund

யேர்மனியில் தமிழர் தெருவிழா
01,02,03 Sep 2023

இன்றைக்கு என்ன சமையல்?



மூன்று மூதாட்டிகள்






# இருந்த இடத்தில் வைக்காவிட்டால் இறந்த (ஐஸ்) கோழியும் கொக்கரிக்கும்





● மாதவி



எங்கடா பேனாக்கு மைவிடும் Ink filler ஐ வைத்தாய். எடுத்த இடத்தில் வைக்கச்சொல்லி எத்தனை தடவை சொல்லி இருப்பேன். என்று அப்பாவும், தையல் ஊசி, நேற்று எடுத்து ததைத்தது நீங்கள்தானே? இந்த ஓலைத் தட்டியிலைதானே ஊசி எப்பவும் குத்திக்கிடக்கிறது. இப்ப பார் நான் தேடித் திரிஞ்சு கடைசியில் உங்கடை பாவாடையில் குத்திக் கிடக்கக் கண்டு எடுத்தேன். தவறி குத்தி இருந்தால்! என்று அம்மாவும், எடுத்ததை, எடுத்த இடத்தில் வைத்துப் பழகவேண்டும், எனச் சின்ன வயதில் இருந்து, அப்பா, அம்மா இருவருமே சொல்லியும், பேசியும்,அடித்தும், நம்மை வளர்த்து இருப்பார்கள்.

நாம் சின்னவயதிலும், கேட்கவில்லை, வளர்ந்தும் கேட்கவில்லை. அது சில தமிழ் மக்கள் மட்டுமல்ல, எந்த நாட்டவர்களாக இருந்தாலும் சில பேர் அப்படித்தான்.



இது ஏன் சொல்கிறேன் என்றால், நாம் கடைக்குபோவோம், அங்கு தட்டில் அடுக்கி வைத்திருக்கும் ஒரு கச்சான் பக்கட்டை எடுக்கிறோம். எடுத்து காசு கொடுக்க வரிசையில் நிற்கும்போது கச்சான் வாங்கினால், ஒரேயடியாக முடிச்சிடுவேன், அத்தோடு கொலாஸ்ரோல் என்றும் ஞானோதயம் வர,அதனை அப்படியே கண்ணெதிரில் உள்ள தட்டில் வைத்துவிட்டு போவோம்.

அது கூட மன்னிக்கலாம், சிலர் கோழியை குளிரூட்டிக்குள்ளால் எடுத்து, காசு கொடுக்க வரும்போது, மனம் மாறி கோழிதேவை இல்லை என்று, எடுத்த இடத்தில் வைக்காமல், முன்னால் என்ன தட்டு இருக்கோ, அது உலர் உணவு வைக்கும் தட்டாகவும் இருக்கலாம், அதன்மேல் கோழியை வைத்துவிட்டு போய் விடுவார்கள்.

ஐஸ்சில் இருந்த கோழி இறைச்சி, வெட்கையில் கிடந்து மீண்டும் (சாகும்) பழுதாகும். இப்படியாக ஐஸ்சில் இருக்க வேண்டிய பல, சும்மா தட்டுகளில் இருப்பதை நீங்களும் கண்டு இருப்பீர்கள்.

உண்மையில் உங்களுக்கு தேவை இல்லை என்று தாமதமாக முடிவு எடுத்தால், அதனை கணக்காளரிடம் நீங்கள் காசு கட்டும் போது திருப்பி கொடுக்கவும். அல்லது, சில நிமிடங்கள் போதும், அதனை எடுத்த இடத்தில் நாமே வைக்கலாம்.


கண்ட கண்ட இடத்தில் வைத்து கோழி இறைச்சியை மீண்டும் சாகடிக்காதீர்கள். தான் செத்தும் எவருக்கும் பயன் இல்லையே என்று, ஐஸ் கோழியும் கொக்கரிக்கும். அது எம்மை மன்னிக்காது. கோழி இறைச்சி மட்டுமல்ல, ஐஸ் பெட்டியில் இருந்து எடுக்கும் எந்தப் பொருளையும், தேவை இல்லை என்றால்,மீண்டும் எடுத்த இடத்திலேயே உடன் வைக்கவும். அப்படிச் செய்தால் ஒரு வேளை எமக்குப் புண்ணியம் கிடைக்கலாம்.



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 324



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# இலங்கை வரும் சீனக் கப்பல்கள்



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

சீனாவின் மற்றொரு ஆய்வுக் கப்பல் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கை வருவது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. இலங்கை கடற்பரப்பில் 17 நாள்களுக்குத் தங்கியிருந்து ஆய்வுகளை இந்தக் கப்பல் மேற்கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நாரா நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள இந்த கடல்வள ஆய்வு ஏதோ ஒரு வகையில் தமக்கு ஆபத்தானதாக அமையலாம் என்ற அச்சம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அந்தக் கப்பலின் வருகையைத் தடுத்து நிறுத்துவதற்கான இராஜதந்திர நகர்வுகளை இந்தியா ஏற்பனவே ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இதுவும் கடந்த கால முயற்சிகளைப் போல தோல்வியில் முடியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி!

இலங்கை கடற்பகுதிக்குள் சீனாவின் அதிநவீன கப்பல்கள் நுழைவது அதிகரித்துச் செல்வது தொடர்பில் இந்தியாவும் தனது கரிசணையை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. இலங்கையும் அந்த கரிசனையை அக்கறையுடன் செவிமடுப்பதாகவே காட்டிக்கொள்கின்றது. ஆனால், சீனாவின் எந்தவொரு கப்பலையும் தடுத்துநிறுத்துவதில் இலங்கை அரசங்கம் உண்மையில் அக்கறை காட்டவில்லை. புதுடில்லியின் சீற்றத்தை இது அதிகரித்தாலும் பொறுமையகவே இருப்பதைவிட டில்லிக்கு வேறு தெரிவுகள் எதுவும் இல்லை.

ஜூலை ஆரம்பத்தில் இலங்கை கடலிற்குள் புகுந்த சீனாவின் அதிநவீன கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரிந்தது ஏன் என்பதையிட்டு இந்தியா ஆராய்கின்றது. சீனக் கப்பல்கள் என்னதான் ஆய்வு என்று சொல்லிக்கொண்டு இலங்கைக் கடற்பகுதிக்குள் வந்து சென்றாலும், அவை தமக்கு எதிரான புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவதற்காகவே வருகின்றன என்ற கருத்துதான் டில்லியிடம் உள்ளது.

சீனாவின் யுவான் வாங்-5, செயற்கைக்கோள் தொழில் நுட்பத்துடன் கண்காணிக்கும் திறன் கொண்ட போர்க் கப்பல் கடந்த வருடம் (2022) இதே காலப் பகுதியில் - அதாவது ஓகஸ்ட் மாதம் இலங்கையை வந்தடைந்தது. இவ்வாறு யுவான் வாங் 5 இலங்கை வந்தடைந்தாலும், அந்தக் கப்பல் வருவதான செய்தி அதற்கு முன்னர் பல மாதங்களுக்கு முன்னதாகவே பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. இதனால் பல திசைகளிலும் இந்தியாவினால் அது கண்காணிக்கப்பட்டதோடு, இலங்கையின் மாத்தறையை அண்டிய கடற் பகுதியில் இருந்து இந்தியாவின் அதி நவீன வசதி கொண்ட கப்பல் கண்காணிப்பதில் ஈடுபட்டதாகவும் அப்போது செய்தி வந்தது.

இப்போது ஒரு வருடத்தின் பின்னர் சீனாவின் இரண்டாவது கப்பல் இலங்கைக்கு வந்து சென்றது இந்தியாவுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது. தற்போது வந்து சென்ற கப்பல் போர்க் கப்பலாக இருப்பினும் அதன் வல்லமை இந்தியாவுக்குத் தெரியும். அதனால் தமக்கான பாதுகாப்புக்கு அது பெருமளவு அச்சுறுத்தலல்ல என்று இந்தியா நம்புகின்றது.

இருப்பினும் கடந்த ஆண்டு வந்த கப்பல் இந்தப் போர்க் கப்பலை விட ஆபத்தானது என்பதால்தான் அதனையிட்டு இந்திய அதிகளவுக்கு அவதானமாக இருந்தது. சீனாவின் சந்தேகத்திற்குரிய விண்வெளி ஆய்வுக் கப்பலில், இந்தியாவின் முக்கியமான இராணுவ நிலைகளை உளவு பார்க்க வாய்ப்பு இருந்ததால், அந்தக் கப்பல் வருவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. எனினும் அப்போது எதிர்ப்பையும் மீறி இலங்கை அனுமதி வழங்கியதன் பின்னர் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மீண்டும் அதி நவீன கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய சீன போர்க் கப்பலான 'ஹாய் யாங் 24 ஹாவ்' இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்து திரும்பிச் சென்றுள்ளது.

இந்தியாவின் அணுஉலைகளும், பல படைத் தளங்களும் தென்னிந்தியாவிலேயே உளளன. சீன ஆய்வுக் கப்பல் இலங்கையிலிருந்து கொண்டே அது தொடா்பான தகவல்களைச் சேகரிக்கக்கூடியது. இந்தியா பதற்றமடைந்திருந்தமைக்கு அதுதான் பிரதான காரணம். ஆனால், இந்தியாவின் இந்தப் பதற்றத்தையிட்டு கொழும்பு கவலைப்படவில்லை.

கடந்த சில வருடங்களாக நாட்டிற்கு வருகை தந்துள்ள இவ்வாறான கப்பல்கள் தொடர்பில் ஆராய்ந்த போது, அவற்றில் பெரும்பாலானவை சீனாவை சேர்ந்த ஆய்வுக் கப்பல்களாகவே உள்ளன. இது கூட இந்தியாவின் சந்தேகத்தை அதிகரிக்கின்றது.

கடந்த மாதம் வருகை தந்த போர்க் கப்பலின் வருகை குறித்து இந்திய அதிகாரிகளிடம் சீனா தெரிவித்த போதும், அதன் வருகை குறித்து இந்திய தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. எனினும் அந்தக் கப்பலுக்கும் இலங்கை அனுமதி வழங்கியது. அந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து ஓகஸ்ட் 12ஆம்திகதி புறப்பட்டுச் சென்றது. இந்தப் போர்க் கப்பல் வருவதற்கும் சீன அதிகாரிகள் இலங்கையிடம் முன்கூட்டியே அனுமதி கோரியிருந்த சமயம் இந்தியத் தரப்பினால் வெளிப்படுத்தப்பட்ட கவலைகள் காரணமாக சீனாவின் போர்க் கப்பலுக்கு அனுமதி வழங்குவதில் இலங்கை தாமதம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே 3வது மிகப்பெரிய கப்பலும் சீனாவில் இருந்து வருகை தரவுள்ளதான தகவல் இப்போது இலங்கைத் தரப்பில் இருந்து இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. சியான் 6 எனப்படும் 3,999 தொன் எடை

30 ஆம் பக்கம் பார்க்க...




இலக்கங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை. இவற்றின் தனித்தன்மை தமிழர் வாழ்வியலில் தவிர்க்க முடியாதவையாக அமைந்துள்ளன.

இவற்றுள் மூன்று இலக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சுமார் ஐம்பதுக்கும் அதிகமான சொற்களை தமிழ் அகராதியில் காணலாம்.

முக்கனி, முத்தமிழ், முக்காலம், முச்சுடர், முப்பலம், முப்பகை, முப்புரம், முப்பொருள், முத்தாரம், முக்கூட்டு, முற்சங்கம் என்று இப்பட்டியல் விரிந்து செல்கிறது.

**யாழ்ப்பாணத்தில் இன்று மூவகையினர்!**

இந்த வரிசையில் ஒன்றாக எங்கள் தாயகத்தில் – யாழ்ப்பாணத்தில் இன்று மூவகையினர் இருப்பதை அங்கு வாழும் மூத்த ஊடகர் ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த மாதம் கனடாவின் ரொறன்ரோவில் இடம்பெற்ற தமிழர் தகவல் விழாவில், "உலகளாவிய ஊடக சாதனைத் தமிழன்; விருது பெற்ற திரு. எஸ்.எஸ்.குகநாதன் நிகழ்த்திய சிறப்புரை இதனை அறியத் தந்தது.

அரசாங்க சேவையில் மட்டும் பணியாற்ற வேண்டுமென விரும்பும் ஒரு வகையினர், வெளிநாடு செல்வதற்குப் பார்த்துக் கொண்டிருக்கும் இன்னொரு வகையினர், நிவாரணங்களை மட்டும் நம்பி வாழும் மற்றொரு வகையினர் என இவர்களை வகைப்படுத்தியுள்ளார் திரு. குகநாதன்.

அரசாங்க சேவையில் சேர்ந்தால் "சும்மா; இருந்து சம்பளம் பெறலாம் என்ற நோக்குடன் வாழ்பவர்கள் முதலாம் வகையினர். உதாரணமாக, குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் அலுவலகத்திலும் தேவைக்கதிகமானோர் (சுமார் 300 பேர்) பணியாற்றுகின்றனர்.

திருமணத்தை எதிர்நோக்கும் இளைஞருக்கான தகுதி வேலை செய்வதல்ல, வெளிநாடு செல்வதற்குப் பார்த்துக் கொண்டிருப்பது. பெண் கொடுக்கும் பெற்றோரின் எதிர்பார்ப்பும் இதுவாக மாற்றப்பட்டுவிட்டது.

நிவாரணங்களை மட்டும் நம்பி இருப்பவர்கள் கணிசமானோர். அரசாங்கம் வழங்கும் நிவாரணங்களைமட்டுமன்றி புலம்பெயர் உறவுகள் வழங்கும் நிவாரணமும் இதற்குள் அடங்கும். அங்குள்ளவர்களுக்கு புலம்பெயர்ந்தோர் உதவுவது நல்லது. செய்யத்தான் வேண்டும்.

ஆனால், அது எவ்வகையான தேவைகளுக்குப் பயன்படுகிறது என்பதை அறிந்து உதவ வேண்டுமென்று குறிப்பிட்ட திரு. குகநாதன் இதற்கு உதாரணமாக ஒன்றைச் சுட்டினார்.

**'இலங்கையில் ஆகக்கூடிய மதுபான விற்பனை யாழ்ப்பாணத்தில்தான்"**

'இலங்கையில் ஆகக்கூடிய மதுபான விற்பனை யாழ்ப்பாணத்தில்தான்" என்று அவர் குத்திக் காட்டிய விடயம், புலம்பெயர் உறவுகள் வழங்கும் நிவாரணம் எவ்வழியாக பயன்படுகிறது என்பதை புலப்படுத்துகிறது.

யாழ்ப்பாணத்தின் யதார்த்தத்தை இந்த அரங்கில் கூறத் தவறினால் அது இனத்துக்குச் செய்யும் துரோகம் என்று கூறியவர் இறுதியாக புலம்பெயர் உறவுகளிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார்:

'அங்கிருப்பவர்களை அங்கேயே வாழக்கூடிய முறையில் ஊக்கமளித்து, அதற்கான உதவிகளை செய்யுங்கள்".

இதுதான் இன்றைய தேவை.

**நன்றி: திரு எஸ்.திருச்செல்வம்.**
**தமிழர் தகவல் கனடா**

# மூவகை உறவுகள்





# உலகை வாழ்விப்பது கடவுள் இல்லை! இலைகளே!!

கருகும் இலை
தரை தழுவும் விரைவில்
ஒன்றா இரண்டா?
நூற்றுக் கணக்கில்
வெள்ளமென முற்றத்தில்
விளக்குமாறு பிடிப்பவர்
முதுகை முறிக்கும்

காய் கனிகள்
நாவின் சுவை
மெட்டுகளுக்கு
விருந்தாகும்
கிளைகள் விறகாகும்
அடி மரம் பலகையாகி
கதவு, நிலை, கூரை
தளபாடங்களென
பயன் விரியும்.

முற்றத்துக் குப்பையாகும்
இலைகளால்
தொல்லையேதான்
பயன் ஜீரோ அன்றோ !
மூடக் கதை பேச வேண்டாம் .!!

சூரிய ஒளியை உறிஞ்சி
ஒளிச் சேர்க்கையால்
சக்தியை உற்பவித்து
தாவரத்தை வளர்க்கிறது
உலகையே வாழ்விக்கிறது
எட்டாம் வகுப்பு மாணவன்
முணுமுணுக்க
தாத்தா தலை குனிகிறார்

உலகை வாழ்விப்பது
கடவுள் அல்ல
இலைகளே
மனதிற்குள் பேசுகிறார்
தெளிவுடன் தாத்தா.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்








# இன்று ஒவ்வொரு ஐந்து வயது இடைவெளிக்குள் ஒரு தலைமுறை உருவாகிவிடுகிறது!

சமீபத்தில் உடல் எல்லை பற்றிய 'மாயா அம்மாவின் காணொளி' ஒன்று சமூக வலைத்தளத்தில் வைரலாகி நெட்டிசன்களிடையேகுறிப்பிடத்தக்க விவாதத்தை உண்டாக்கியிருந்தது. நான் அந்த காணொளியைப் பார்த்துவிட்டு யோசித்துப்பார்த்தபோது, எனக்கு அதில் எந்தவித நெருடலும் ஏற்படவில்லை. ஒரு நிகழ்கால சமுதாய பிரச்சனையை, அம்சத்தை மிக அழகாகவும் எளிமையாகவும் விவரிக்கும் விதமாகவே அந்த காணொளி இருந்தது. இன்னும் சொல்லப்போனால் நாம் சற்று கவனம் செலுத்திச் சிந்தித்துப்பார்க்க வேண்டிய ஒரு உணர்வுப்பூர்வமான விஷயம் என்றே நான் நினைக்கிறேன்.

காணொளியில், மாயாவும், தானும், மல்லிகைப்பூ வாங்கச் சென்ற ஒரு பூக்கடையில் நடந்த ஒரு சம்பவத்தை பற்றி விவரிக்கிறார் மாயாவின் அம்மா. பூ வாங்கிய போது, அந்த பூ விற்கும் பாட்டி, மாயாவின் கன்னத்தைக் கிள்ளி கொஞ்சியிருக்கிறார். அந்த நேரத்தில் மாயாவின் அம்மா அந்த செயலை கவனித்திருக்கவில்லை. பிறகு மாயா அவள் அம்மாவிடம் அந்த பாட்டி கன்னத்தைக் கிள்ளியதாகவும் அது அவளுக்கு வலித்ததாகவும் சொல்லியிருக்கிறாள். அப்போதுதான் மாயாவின் அம்மா உடல் எல்லைகள் பற்றிய கருத்தை முன்வைக்கிறார். அந்த பாட்டி, மாயாவுக்குத் தீங்கு செய்யும் எண்ணத்தில் அப்படிச் செய்யவில்லை என்பதையும், அவரது அந்த செயல் தனிமனித எல்லைகள் மற்றும் சம்மதத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் நிகழ்ந்தது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். இது தலைமுறை இடைவெளி காரணமாக ஏற்பட்டது என்பதை மாயாவிற்கு மிக நேர்த்தியாகவே புரிய வைக்க முயற்சி செய்கிறார்.

பத்து இருபது வருடங்களுக்கு முன்னால் வரை ஒரு தலைமுறைக்கும் அடுத்த தலைமுறைக்குமான கால இடைவெளி அதிகமாக இருந்தது. இருபது வயது மனிதனுக்கும், நாற்பது வயது நிரம்பிய ஒரு மனிதனுக்கும் கூட சிந்தனையிலும், கருத்தியலிலும் மிகப் பெரிய வேறுபாடு இருந்திருக்கவில்லை. ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லை ஒவ்வொரு ஐந்து வயது இடைவெளிக்குள் ஒரு தலைமுறை உருவாகிவிடுகிறது. ஒவ்வொரு தலை முறைக்குமான சிந்தனைகள் பெருமளவில் வேறுபட்டு இருக்கிறது. அதனால் இன்றைய சமுதாயத்தில் வெவ்வேறு குழுக்கள், ஒரே இடத்தில், ஒரே காலகட்டத்தில் குழுமி தீவுக்கூட்டமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்டச் சூழலில் இது போன்ற தர்க்கங்கள் நேர்ந்துகொண்டேதான் இருக்கும். பல நேரங்களில் இவை எல்லாவற்றிற்கும் தீர்வு காணமுடியாது. ஆனாலும் குழந்தைகளும் வெவ்வேறு தலைமுறையினரும் அவர்களுக்கான இடைவெளியில் உருவாகிவிடும் சிந்தனை வேறுபாட்டிற்கான காரணங்களை யாவது தங்கள் மனதிற்குள் அலசிப் பார்க்கும் சூழலை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அது வெறுப்புணர்வற்ற சமுதாய வளர்ச்சிக்கு அவசியமானது. என்பது, தொண்ணூறுகளில் பிறந்த தலைமுறையினரிடம் அவர்களின் முந்தைய தலைமுறையினர், நாங்கலாம் எங்க குழந்தைகளுக்கு 4அல்லது 5வயது வரை தாய்ப்பால் கொடுத்திருக்கிறோம் என்று பெருமையாக்கச் சொல்லிக் கொண்டபோது அவர்களுக்கு ஏற்பட்ட அதே அறுவறுப்பும் எரிச்சலும்தான் அவர்கள் பெருமையாகக் கூறிக்கொள்ளும் சில பழக்கவழக்கங்களைப் பற்றி இன்றைய தலைமுறைக்கும் இருக்கின்றது. அப்பொழுதெல்லாம் குழந்தைப்பருவம் என்பது முதல் பத்து, பன்னிரண்டு ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. அதுவரை அவர்களுக்கென்ற ஒரு தனிப்பட்ட இடம் தேவையில்லாமல் இருந்தது. இப்போது அப்படியில்லை. ஒரு ஐந்து வயது சிறுமியைஃசிறுவனைக் குழந்தையாக நடத்துவதும் கொஞ்சுவதும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. நம்மிடமிருந்த குழந்தைத்தனத்தை இப்போது காணமுடியவில்லை, இப்படிப்பட்ட மனநிலையை நாம் ஊக்குவிக்கக் கூடாது என்பது சுயநலத்தின் உச்சக்கட்டம். ஒரு தனிப்பட்ட உயிரின், தலைமுறையின் மனவளர்ச்சியை உள்வாங்கிக்கொள்ள முடியாத, முயலாத விட்டேத்தித்தனம் என்றே நான் நினைக்கிறேன்.



தீபா ஸ்ரீதரன்
(தைவான்)

சமூக வலைத்தளங்களில் வாசித்த இந்த காணொளியைப்பற்றிய கருத்துகள் எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. மாயா அம்மாவின் சாதிக்காரர் அவள் கன்னத்தைக் கிள்ளியிருந்தால், ஒரு பணக்காரர் கிள்ளியிருந்தால், அல்லது ஒரு பிரபல நடிகரோ நடிகையோ கிள்ளியிருந்தால் அவர் இப்படிச் சொல்லியிருப்பாரா, பெண்ணிய சிந்தனை முற்றியதின் விளைவோ என்றெல்லாம் வர்ணங்கள் பூசப்பட்ட கேள்விகள். கேள்விகள் கேட்டுக்கொள்வது சரிதான், ஆனால் இதில் முதலில் கேட்கப்பட வேண்டிய கேள்வி, யார் அந்த குழந்தையின் கன்னத்தைக் கிள்ளினார் என்பதல்ல, அந்தக் குழந்தைக்கு அப்படிக் கொஞ்சியது பிடித்திருந்ததா இல்லையா, அந்த குழந்தை அதை எப்படி உணர்ந்தது என்பதுதான். எனக்கும் தனிப்பட்ட முறையில் குழந்தைகளை அணைத்து, முத்தமிட்டுக் கொஞ்சுவது பிடிக்கும். ஆனால் இன்றைய பல குழந்தைகளுக்கு அது பிடிப்பதில்லை என்பதை நான் சில நேரங்களில் உணர்ந்து விலகியிருக்கிறேன். இது காலத்தின் மாற்றம்.

ஒருவேளை அந்த குழந்தை அந்த பாட்டி கொஞ்சியதைப்பற்றி தன் அம்மாவிடம் குறை கூறாமல் இருந்திருந்தால், அந்த அம்மாவே இதுபோன்ற எண்ணத்தை அந்தக் குழந்தைக்கு விதைத்திருந்தால் அல்லது அந்த செயலுக்காக அந்த பாட்டியிடம் மரியாதையில்லாமல் நடந்து கொண்டிருந்தால் இதைப் பற்றி வேறு விதமாக விவாதம் செய்திருக்கலாம். காலகாலமாய் குழந்தைகளை வளர்த்துக்கொண்டுதானே இருக்கிறோம் இதில் புதிதாகக் கற்றுக்கொள்ள என்ன இருக்கிறது என்ற கேள்வி முட்டாள்தனமானது. இன்றைய சூழலில் ஒரு பெற்றோராக ஒவ்வொரு நாளும் கற்றுக்கொள்ள நிறைய



விஷயங்கள் இருந்துகொண்டே இருக்கிறது. எல்லாமே எல்லாருக்கும் பொருந்துவதுமில்லை. ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது அப்படியே ஒவ்வொரு பெற்றோரும்.

இன்றைய சமூக வலைத்தளம் பெரும்பாலும் எழுத்தாளர்களும், சமூக ஊடக செல்வாக்காளர்களும் நாட்டாமை செய்யும் கட்டைப் பஞ்சாயத்தாகத்தான் இருக்கிறது. ஒரு முக்கியமான சமுதாயப் பிரச்சனையை

28 ஆம் பக்கம் பார்க்க...





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# Lucky Fly Reisebüro

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

## Round tour Doha/ Qatar

01.03.2024 - 08.03.2024
சுற்றிப் பார்கலாம்! வாருங்கள்!!




5 Star. 4 Star hotels

6 Nights in Doha / 3 Nights in Doha

Rund tour

Flight ticket

1049€ \ 1449€

6 Nights TOUR : A,B,C,D,E,F உள்ள இடங்கள்.

3 Night TOUR : A, B, C உள்ள இடங்கள் மட்டும்.

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

e.mail: info@L-Fly.de | www.L-fly.de

SriLankan Airlines | QATAR AIRWAYS القطرية | Emirates | طيران الخليج Gulf Air

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# இன்றைக்கு என்ன சமையல்?

கொடுக்கும் பணத்தை சுமையாக கருதாமல் மனமுவந்து அதைக்கொடுக்கலாம் ஏனெனில் , வீட்டு வேலை பளு குறையும்போது நிச்சயம் நம்மால் நம்முடைய தொழிலில் இன்றைக்கு என்ன சமையல் ?

அன்று தொட்டு இன்றுவரை பெண்களை தொடர்ந்துவரும் மிக மிக இயல்பாக்கப்பட்ட கேள்விதான் இது . ஒரு பெண்ணுக்கு சமையலில் ஈடுபாடு இருக்கிறதோ இல்லையோ , முழு சமையலும் அவளது பொறுப்பு அல்லது கடமை என்கிற எழுதப்படா விதி ஒன்று நம் சமூகத்தில் காலங்காலமாக உள்ளது . மூன்று வேளையும் என்ன சமைப்பது , என்னென்ன காய்கறிகளை வாங்குவது ,காஸ் உற்பட எந்தெந்த மளிகைப்பொருள் தீரும் நிலையில் உள்ளது , வாங்கவேண்டிய மளிகைகளை பஜட் போடுவது, என பெண்கள் அன்றுமட்டுமல்ல இன்றும்கூட அவற்றைப்பற்றியே அதிகம் சிந்தித்துக் கொண்டிருப்பதால் அவர்களது சிந்தனையில் வேறு எதைப்பற்றியும் புதிதாக சிந்திக்க நேரமிருப்பதில்லை என்பது சதா சமைப்பதிலும் வீட்டு வேலைகளை தொடர்ந்து செய்துகொண்டிருப்பதிலும் அகப்பட்டிருக்கும் பெண்களைக் கேட்டால் தெரியும் !

வீட்டிலும் ஆண்கள் சமைப்பதற்கு ஆரம்பித்துவிட்டார்கள்தானே என சிலர் கூறிக்கொண்டாலும் , அந்த ஆண்களின் விகிதம் மிகமிக சொற்பம் என்பது நாம் அனைவரும் அறிந்தவொன்றே . “நல்ல குடும்பப் பெண்ணாக இருக்கவேண்டும் “எனும் பல திருமண பெண் தேடும் படலத்தின் இவ்வாறான எதிர்பார்ப்புகளும்கூட வீட்டை பராமரிப்பதற்கு ஒரு பெண் வேண்டும் எனும் அடிப்படையே . சமைப்பதற்கும் , வீட்டுவேலைகளை செய்வதற்கும் குடும்பத்தை கவனித்துக் கொள்வதற்கும் ஒரு பெண் வேண்டும் என்பதற்காகவே திருமணம் செய்துகொள்ளும் பல ஆண்கள் இன்றுவரை நம் சமூகத்தில் அதிகம் . வெளிநாட்டில் நல்ல வேலை , கை நிறைய சம்பளம் ஆனால்





சாப்பாடுதான் பிரச்சினை அதனால் இங்கிருந்து ஒரு நல்ல பெண்ணாக பார் த்து திருமணம் செய்து வைக்கிறோம் என பல பெற்றோர்கள் மற்றும் சகோ தரர்கள் சொல்லி கேட்டிருக்கிறேன் . இதெல்லாம் ஒரு பிரச்சினையா ? என நீங்கள் கேற்பது புரிகிறது ,



பிரியா இராமநாதன்
(இலங்கை)

வாழ்க்கைத்துணை என்பது வெறும் சமையலை வீட்டு பராமரிப்பினை முதன்மையாகக்கொண்டு தீர்மானிக்கப்படுவதுதான் பெண்களின் பிரச்சினை! பெண்கள்வேலைக்குப் போகாதவரை, பொருளாதாரத் தற்சார்பு பெற்றிருக்காதவரை இதில் பெரிய பிரச்னையில்லை. எதிர்ப்பு எதுவுமில்லாமல் அல்லது வேறுவழியில்லாமல் பெண்கள் இதனை ஏற்றுக் கொண்டு வாழ்ந்திருக்கலாம். (ஏன் இன்றும்கூட வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்) ஆனால், பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வரும் தற்போதைய நிலையில், வெளியே போய் வேலையையும் பார்த்துக்கொண்டு, வீட்டு வேலையையும் சமையல் வேலையையும் செய்வது பெண்களால் இயலாத காரியம். அடுத்தடுத்து வேலை. சுறுசுறுவென பாதங்கள் நோவெடுத்து கொஞ்சம் உற்கார்ந்தால் தான் என்ன என மனம் கெஞ்சினாலும் குவிந்து கிடைக்கும் வீட்டுவேலைகள் பெண்களை உற்காரகூட அனுமதிப்பதேயில்லை . ‘அடுத்து என்ன வேலையை முடிக்கவேண்டும் ?‘ என்ற ஒரே சிந்தனையில் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு வேறு மாற்று சிந்தனைகள் தோன்றுவதே இல்லை, எழுத்தாளர் அம்பை தன “வீட்டின் மூலையில் ஓர் சமையலறை “சிறுகதையில் கூறியிருப்பதுபோல் .

வீட்டு பராமரிப்பில் எந்த பிரச்சினையும் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் “ வேலைக்கு போகும் பெண் வேண்டாம் எனும் கண்டிசன்களும் , வேலைக்கு போய்தான் சம்பாதிக்கவேண்டும் என்றில்லை போதிய சம்பாத்தியம் எங்களிடம் இருக்கிறது பெண் வீட்டிலேயே ராணி போல் இருக்கலாம் என்கிற சால்ஜாப்புக்களும் . (ஆனால் பெண் ராணியா , வேலைக்காரியா என்பது பின்னாளில்தான் புரியும்) அப்படியென்றால் பெண்ணை வேலை வாங்குவதையேதான் ஆண்கள் நோக்கமாக கொண்டிருக்கின்றார்களா? ஆண்களெல்லாம் மோசமானவர்களா? என்றால் , நிச்சயம் இல்லை. காலந்தோறும் ஆண் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற நம் சமூக கட்டமைப்பில் வளர்க்கப்பட்ட ஆண்கள் அறிந்தோ அறியாமலோ இதெல்லாம் நிச்சயம் பெண்களின் கடமைதான் என்கிற மனவோட்டத்தில் ஊறிப்போயிருக்கிறார்கள் என்பதே கசப்பான உண்மை . வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தாலும் வீட்டிலும் சமையல் செய்துவைப்பது அவளது கடமை என்கிற எதிர்பார்ப்புதான் பெண்களின் பிரச்சினை .

பாட்டிகள் காலத்தில் உணவு பரிமாறி விட்டு பயத்துடன் உண்டு முடியும் வரையில் ஆண்களுக்கு அருகில் நின்றுகொண்டு பரிமாறிக்கொண்டிருப்பார்களாம். பரிமாறுவது சரி , அதென்ன பயத்துடன் ? உணவில் ஏதேனும் குறை என்றால் தட்டு பறக்குமாம் .. ஏன் சோற்றில் கல்லிருந்தால் அந்த கல்லை பொருக்கி தன்னுடைய கையில் வைத்து உள்ளங்கை சிவக்கும்

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# யாழ்ப்பாணத்தில் தயாராகும் இறப்பர் காலணிகள்!

நேர்கண்டவர்:
ஞா.கவினி (இலங்கை)

> இவற்றை நாங்கள் பெரும் சாதனைகளாக பார்க்கவில்லை. எங்களுடைய பிரதேசத்தின் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியாக நோக்குகிறோம் என்கின்றனர் இந்தத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள பெண்கள். இவ்வாறு சமூகத்தை மேம்படுத்தும் வேலை திட்டங்களை பிரதேசங்களுக்குள் கொண்டு வரும்போது அந்தப் பிரதேச வாசிகள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தேவையற்ற விடயங்களில் இருந்து விலகிக் கொள்ளவும் வழிவகுக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இறப்பர் பாதணிகளினை உருவாக்கி வருகின்றனர் சித்தங்கேணியில் இயங்கும் அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தினர். பெண்களுக்கான ஒரு தொழில் முயற்சியாகவே இந்த இறப்பர் பாதணிகள் உற்பத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்தும் திட்டங்களில் ஒன்றாக இது முன்னெடுக்கப்பட்டு, பெண்களின் வாழ்வாதாரத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு பாதணிகளின் உற்பத்திக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல், சந்தைப்படுத்தல் ஆலோசனைகளை வழங்குதல், மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் போன்ற தேவைகளுக்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் 3.45 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றால் வட்டு. கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் 14 பெண்களுக்கு பாதணி உற்பத்தி தொடர்பான முழுமையான பயிற்சிகள் ஒருமாத காலமாக வழங்கப்



பட்டது. இதனையடுத்து கிராமத்து பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்திகள் இரட்டிப்பு வேகத்தில் சென்று கொண்டிருக் கின்றது என்பது மிகவும் மகிழ்ச்சியான விடயம்.

தற்போது மனதைக் கவரும் பலவித வண்ணங்களிலும்,பல அளவுகளிலும் உருவாக்கப்படும் இறப்பர்ப் பாதணிகளுக்கு 'ஏஆர்பீ' (ARP -Anthiran Rubber Products) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவை மிகத்தரம் வாய்ந்த காலணிகளாக இருப்பதோடு சந்தையில் இவற்றுக்கான கேள்விகளும் அதிகமாக காணப்படுகிறது. சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அணியக்கூடிய மிகப் பொருத்தமான காலணிகளை எமது பெண்கள் உற்பத்தி செய்து வழங்குவது என்பது நமது சமூகத்தின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் ஒரு மிகச்சிறந்த செயற்பாடாகவே காணப்படுகிறது. சந்தை வாய்ப்பு என்பது இவர்களுக்கு ஒரு சவாலான விடயமாக காணப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அரிதாகவே வடக்கில் உருவாக்கப்படுகின்ற பாதணிகளில் இவர்களுடையதும் ஒன்றாக இருக்கின்றது.

## உள்ளூர் உற்பத்தியும் சமூக ஒற்றுமையும்

இவற்றை நாங்கள் பெரும் சாதனைகளாக பார்க்கவில்லை. எங்களுடைய பிரதேசத்தின் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியாக நோக்குகிறோம் என்கின்றனர் இந்தத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள பெண்கள். இவ்வாறு சமூகத்தை மேம்படுத்தும் வேலை திட்டங்களை பிரதேசங்களுக்குள் கொண்டு வரும்போது அந்தப் பிரதேச வாசிகள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தேவையற்ற விடயங்களில் இருந்து விலகிக் கொள்ளவும் வழிவகுக்கிறது.

எமது காலணிகளை உற்பத்தி செய்வதற்கு எமது கிராமத்தில் உள்ள சமூகமட்ட அமைப்புகள் கிராமம் மட்டுமே அமைப்புகள் என பலரும் மிகவும் உறுதுணையாக இருக்கின்றனர்.பெண்கள் ஒன்று சேர்ந்து இந்த தொழிலை செய்தாலும் எங்களுக்கு பக்க பலமாக எமது கிராமத்து மனிதர்கள் அனைவரும் இருப்பது நமக்கு மகிழ்ச்சியை தரக்கூடிய ஒரு விடயம் என்று உற்பத்தியாளர்கள் வட்டம் கூறுகின்றது.

## இதுதான் எமது கனவு

உண்மையிலேயே எங்களுக்கு இதனை இன்னும் விருத்தி செய்து இன்னும் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற எண்ணமும், நமது உற்பத்தி பொருட்கள் நாடு எங்கிலும் விநியோகிக்கப்பட வேண்டும் என்கின்ற கனவும் இருக்கின்றது. நிச்சயமாக அது நிறைவேறும் என்று நம்புகிறோம். எங்களது கனவு மெய்ப்படும் அந்த நேரத்தில் எங்களது பாதணித் தொழில் கூடமானது மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கும். எமது பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு மிகவும் இலகுவான வழிகளை நாங்கள் கண்டுபிடித்திருப்போம் என்கின்றனர் பாதணி உற்பத்தியாளர்கள்.

நன்றி.தமிழர் பொருண்மியம்





# காய்ச்சல்

உடம்பு கொஞ்சம் ஏலாத மாதிரி இருந்திச்சுது, lectures ஐ cut பண்ண ஏலாது எண்டு போட்டு கம்பஸ்/க்கு வந்தா உடம்பு சுடுற மாதிரி இருந்திச்சுது. காயுதா காயேல்லையா எண்டு தொட்டுப் பாக்க வடிவாத் தெரியேல்லை. ஓடிப்போய் முந்தி ஒரு டொக்டரிட்டை காட்டி தந்த prescription ஐக் காட்டி pharmacy யில மருந்தை எடுத்துப் போட்டு வீட்டை வந்தன். வீட்டை வந்து சாப்பாடுக்கு எந்தக் கடை menu விலயாவது முருங்கைக்காய் கறி, மீன் தீயல், துவரம்பருப்பு ரசம் இருக்கா எண்டு தேடீக் களைச்சுப் போய் , Uber- eats, ல soup ஐ ஓடர் பண்ணீட்டு இப்போதைக்கு பிளேன்ரீயும் பிஸ்கட்டாலேம் வயித்தை நிரப்பீட்டு இருந்தன்.

வாங்கின Antibiotics, vitamin எண்டு எல்லாத்தையும் போட்டிட்டு இருக்க நித்திரை தூக்கி அடிக்க போத்திப் படுத்தன். "பேசாம மூடிக்கொண்டு படு..வே ர்த்தாத்தான் காயச்சல் விடும்" எண்டு சொல்லீட்டு அம்மா Vicks ஐ நெஞ்சிலேம் தொண்டையிலேம் பூசீட்டு மூக்கில டப்பியை மணக்கப் பிடிக்க ஆழமா மூச்சை எடுத்திட்டு அப்பிடியே போத்துப் படுத்தன். அரை நித்திரையில அனுங்கி முழிக்க அம்மா நெத்தீல ஓடிக்கலோன் நனைச்ச துணியை வைச்ச படி கட்டிலுக்குப் பக்கத்திலயே இருந்தா. இந்தா பனடோலைக்குடி எண்டு தந்திட்டு அடுத்தது விடிய நாலு மணிக்குத்தான் இப்ப படு எண்டு சொல்லீட்டு தேவாரம் பாடத் தொடங்கினா.

விடிஞ்சது தெரியாம பிந்தி எழும்பி வர " அப்பவும் சொன்னான் மழைக்க நனையாத எண்டு , இப்ப பார் கசக்காரன் மாதிரி இரவிரவா இருமிறாய்" இந்தா இதைக்குடி எண்டு அப்பாச்சி பாலுக்க உழுத்தம்மாவை கரைச்சுக் கொண்டு வந்தா. குடிச்சு முடிய நெத்தீலேம் நெஞ்சிலேம் கையை வைச்சிட்டு மேல் சுடுது சட்டையைப் போடு எண்டு அதட்டீட்டு , இவனை இண்டைக்கு பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டாம் எண்டு சொல்ல அண்ணா தான் மட்டும் போகப் போறன் இவன் வீட்டை நிக்கப் போறான் எண்ட பொறமையோடையும் எனக்கும் காய்ச்சல் வரேல்லையே எண்ட ஏக்கத்தோடையும் போனார்.



**Dr.T. கோபிசங்கர்**
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

சும்மா நாளில பள்ளிக்கூடம் போகாம நிண்டா ஒண்டு படிக்கோணும் இல்லாட்டி ஏதாவது வேலை செய்யோணும், ஆனால் காய்ச்சல், பள்ளிக்கூடம் உரவ, மழை இப்பிடி ஒரு combination கிடைச்சா ராஜயோகம் தான். காலமை இஞ்சியைச் சுட்டு வைக்கிற சம்பல், இடியப்பம் சொதியோட "வேண்டாம் வேண்டாம்" எண்ட அம்மா தீத்தினா.

பத்து மணிக்கு மல்லித்தண்ணியோட தோசைக்கல்லில வாட்டின பாண்துண்டு, பிறகு தேசிக்காய்த் தண்ணி. மத்தியானத்துக்கு முட்டைப் பொரியலும், விளைமீன் தீயலும், நாலு மணிக்கு இருக்கிற முழுமிச்சப் பாலும் எனக்கு மட்டும் தேத்தண்ணி ஆகிச்சுது. அதோட கடிக்க பணிஸ், கிறீம் கிரக்கர் எண்டு ஏதாவது மாறி மாறி வந்திச்சுது . அடிக்கடி வந்து எல்லாரும் தொட்டுப் பாத்து காயுதா காயேல்லையா எண்டு கண்டுபிடிச்சு பனடோல் தந்திச்சினம். அதோட போத்தில் திருப்பித் தாறம் தம்பிக்கு காய்ச்சல் எண்டு சந்திக் கடையில அண்ணா வாங்கின orange barley ரெண்டு பேருக்கும் கிடைச்சுது. மரத்து முருங்கைக்காயோட வந்த பக்கத்து வீட்டு அன்ரி வேற ஏதும் வேணுமே எண்டு கேட்டிட்டுப் போனா.

காய்ச்சல் வந்தா வீட்டை ராசா தான், எல்லாரும் விழுந்து விழுந்து கவனிப்பினம். அதோட எல்லாரையும் அதை எடுத்துத் தா இதைத் தா எண்டு வேலையும் வாங்கலாம். ஆனா ஒண்டு வீட்டை ஆருக்காவது வருத்தம் வந்தா எல்லாருக்கும் ஒரே சாப்பாடு தான்."அவன் காய்ச்சல் காரன் பாத்துக்கொண்டிருக்க நீ சாப்பிடிறதே" எண்ட அறிக்கையோட எல்லாரும் அடங்கீடுவினம். மூண்டாம் நாள் இருமல் கூடி சளியா மாற தூதுவளையும் மல்லியும் போட்டுக் காச்சின கசாயம் சூடா இருந்த புட்டுப் பானைக்கை தேயிலைச்சக்கை, தேசிக்காயத் தோல், eucalyptus இலையையும் எண்டு எல்லாத்தையும் போட்டு கலைச்ச ஆவியை முகத்தை துவாயால மூடி முழுசா மூக்கால இழுத்துப் பிடிச்சன்.

கடைசீல ஐஞ்சு நாளில காய்ச்சல் மாறிச்சுது. காய்ச்சல் மாறி ரெண்டாம் நாள் சுடுதண்ணி வைச்சுத் தோய வாத்து , மீனுக்குப் பதிலா இறைச்சி காய்ச்சித்தந்து கொஞ்சம் வீட்டுக்க விளையாட விட்டிச்சினம். மூண்டாம் நாள் பச்சைத் தண்ணீல குளிக்க விட்டுப் பாத்து ஒண்டும் இல்லை எண்ட பிறகு தான் பள்ளிக்கூடம் போக விட்டிச்சினம்.



"கோழி ஒரு மாதிரி கொக்கரிக்குது போய்ப்பார்" எண்டு ஆச்சி சொல்ல போய்ப் பாத்தன். உமிச் சட்டிக்கு மேல இருந்த கோழியை தூக்கி எறிஞ்சிட்டு முட்டையைத் தூக்க அது சூடா இருந்திச்சுது.இருமல் மாறாதால வந்த வினை இது, காலமை வெள்ளன வெறும் வயித்தில பச்சை முட்டை குடு இவனுக்கு எண்டு ஆரோ அம்மாக்கும் கோழிக்கும் சொன்னதால காலமை முட்டையோட தான் நாள் தொடங்கும்.

முட்டை நுனியை கரண்டியால தட்டி உடைச்சு எடுத்து எறிஞ்சிட்டு, மேல இருக்கிற வெடுக்கை முன்தென்னை மரத்தில புடுங்கின ஈக்கிலால எடுத்து எறிஞ்சிட்டு, ரெண்டு விரலால எடுத்துப் போட்ட மிளகையும் உப்பையும் ஈக்கிலால கலக்கீட்டு இப்பிடியே குடி எண்டு தந்தா அம்மம்மா. குடிக்க முதலே நான் ஓங்காளிக்க "அப்பிடியே தொண்டைக்குள்ள விடிறன் விழுங்கு" எண்டு சொல்லக் கண்ணை மூடிக்கொண்டு குடிச்சிட்டுப் போனன். பின்னேரத் தேத்தண்ணி போய் வேர்க்கொம்பு கோப்பி வந்திச்சுது.

பத்தாத்துக்கு ஆட்டுப்பால் தான் நல்லம் எண்டு ஒரு ஊர்ப் பரியாரி சொல்ல அடுத்த நாளே ஆட்டுக்குட்டி வீட்டுப் பத்தீல நிண்டிச்சுது. "ஆசுபத்திரி வாசலும் பொலிஸ் ஸ்டேசன் வாசலும் ஒரு நாளும் ஏறக்கூடாது" எண்டு ஆச்சி சொல்லிறதால எப்பிடியாவது கை வைத்தியத்தால இருமலை மாத்திற முயற்சீல இலை, குழை, தழை எண்டு சாப்பிடத் தந்திச்சினம். எங்கடை சந்தீல இருந்த சிவராமலிங்கம் apothecary பாவம் ஒரு நாளும் எங்களால வருமானம் இல்லை. அவரே ரெண்டு பாணி மருந்தும் பனடோலும் தான் வைச்சிருந்தவர்,

28 ஆம் பக்கம் பார்க்க...





# எமது உடலுக்கு வயதாகி விட்டதா? அல்லது எமக்கு வயதாகி விட்டதா?

ஏன் இப்படிக் கேட்கிறேன் என்றால் எம்மில்சிலர்வயதானாலும்மனதில் இளமையாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர் களைத் தான் உடல் மட்டும் வயதானவர் என்று கூற முடியும்.

ஒரு வயதான இளைஞரை பாடசாலை வாசலில் சந்தித்தேன். பேரனை வீட்டிற்கு அழைத்துப் போக வந்திருந்தார். 10 வய தான பேரன் பாடசாலை விட்டு வந்ததும் தாத் தாவைப் பார்த்து, Hi, Tom என அழைத் தான். ஆமாம் பேரன் தாத்தாவை அப்படித் தான் அழைத்தான். தாத்தா என அழைப்பது அவருக்குப் பிடிக்காத விஷயமாம். அப்படி அழைப்பதால் தான் வயதாகி விட்டதாக உணர்கிராறாம். அதனால் வயதாகி விட்ட தாக உணர்ந்தாலே ‘கிழம் தட்டி விடும்.’ அதனால் பேரன் தன்னைப் பேர் சொல்லி அழைப்பதே மேல் என்றார் இந்த மனதால் இளைஞரானவர்.

அவரது மனோபாவத்தை இரசித்தேன். இப்பொழுது எமது கீழைத்தேயக் கலாசார த்தை எண்ணிப் பார்த்தேன். பிரம்மச்சாரியம், அதையடுத்து இல்லறம் பின் வானப்பிரஸ் தவம் இறுதியாக சன்னியாசம். ஆமாம் இல்லறத்தில் குழந்தைகளைப் பெற்று முறையாக வளர்த்து ஆளாக்கி விட்டால் சன்னியாசத்தை நோக்கி, கடவுளைச் சிந்தி த்து, தியானம் பூஜை இவற்றில் ஈடுபட்டு, மோட்ச வழிக்கு புண்ணியம் தேடுவதே நம் இலக்காகி விடும். இந்தச் சிந்தனையில் நம்மவர் முழுமையாக ஈடுபடா விட்டாலும் அந்த “வயதானாலும் மனதில் இளமையாக இருக்கும்” இளைஞர் போல் சிந்திப்பது கிடையாது. ஏதோ வாழ்ந்து முடித்து விட்டோம். இனிமேல் நமக்கு என்ன? நல்ல படியாகப் போய்ச் சேர்ந்தால் போதும் என்ற வகையில் பேசுவதை நாம் அடிக்கடி கேட்டுள்ளோம்.

எனக்குத் தெரிந்த ஒரு 65 வயது மதிக் கக் கூடிய அம்மையார், “ கார்த்திகா, இந்த உடம்பு இனிமேல் றுயசசயவெல முடிந்து போன ஊயச மாதிரித் தான். அப்பப்போ இதற்கு சுநியசை செய்து தான் ஓட வேண்டும். இதற்கு என்ன Spare Parts வாங்கிப் போட முடியுமா?” என்றார்.

உடலுக்கு வயதாகி விட்டால் இயற்கை யாக உடல் இளமையில் இருந்தது போல வளைந்து கொடுக்காது. தசை நார்கள் தளர்ந்து விடும். வியாதி ஏதாவது வந்தால் குணப்படுத்த நாளாகும். தினமும் அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்வதால் உடலைச் சீராக வைத்திருக்க முடியும். நாம் வயதாவதைத் தடுக்க முடியாது. ஆனால், வயோதிபத்தால் வரும் உடல் உபாதை களைக் குறைக்க முடியும்.

சர்வதேச வயோதிபருக்கான சிகிச்சை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கை யில் 90 வயதிற்கு மேற்பட்டவரை வைத்து ஆராய்ந்ததில் உடற்பயிற்சி மூலம் அவர்கள் முந்தி இருந்த நிலையில் இருந்து முன்னேறி உள்ளதாக அறிவித்திருக்கிறது.



நாட்டியக் கலாநிதி
கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)

உங்கள் உடல் இடம் தரும் அளவுக்கான பயிற்சி போதும் என இந் நிறுவனம் கூறுகி றது. இங்கு Linda McDonald கூறுவதைக் கேழுங்கள். இவர் பல வருடங்களாக இடுப்பு நோவால் பாதிக்கப்பட்டதால் இறுதியில் சத்திர சிகிச்சையை அவரது முள்ளந்தண்டில் செய்ய வேண்டி ஏற்பட்டதாம். இதன் பின் இவரால் நன்றாக நடமாட முடியாமல் போய் விட்டது. நடமாட முடியாமல் போனதையடுத்து நடமாடாமல் இருப்பவரைத் தாக்கும் வியா திகளான இரத்த அழுத்தம், அளவுக்கு மீறிய உடற்பருமன், இதைத் தொடர்ந்து Diabetes யாவற்றாலும் பாதிக்கப்பட்டார்.

இவர் உடல் நோவைத் தீர்க்க ’Living Longer; Living Stronger’ அதாவது ‘சுகத்துடன் நீண்ட ஆயுள்’ என அரசால் நடத்தப்பட்ட மையத்திற்குச் சென்றார். “இந்த மையத்திற்கு நான் மிகுந்த மனக் கிலேசத்துடன் வந்தேன். பயிற்சியாளர் கூறியவற்றைச் செய்ய எனக்குச் சிறிது நாட்கள் பிடித்தது. நான் முன்பு எனக்கு இருந்த கூச்சம் பயத்தில் இருந்து மெல்ல மெல்ல விடுபட்டேன். பயிற்சியாளரும் எனது இடுப்பிலும் முதுகிலும் அழுத்தாத படி பயிற்சியை ஆரம்பித்தார்.

சில மாதங்களில் நான் இதன் பலனைக் கண்டேன். எனது உயர் இரத்த அழுத்தம் வலுவாகக் குறைந்தது. நான் இப்பொழுது நிறைந்த உடல் உறுதியுடனும் சுறுசுறுப்பா கவும் உலாவி வருகிறேன். உடற்பயிற்சி மூலம் எனது உடல் நன்றாகத் தேறி உள்ளது. நிறைந்த சக்தியைப் பெற்றவளாக இருக்கி றேன். முன்பு நான் இப்படி இருக்கவில்லை. மொத்தத்தில் எனது வாழ்க்கை சுகத்துடனும் இன்பகரமாகவும் இருக்கிறது” என்கிறார்.

சீன மொழியில், ’உடல் உழைப்பிற்கு நாம் பயப்படக் கூடாது. உழைக்காத உடலைக் கண்டு தான் பயப்பட வேண்டும் அதுவே நோய் நொடி குடி கொள்ளும் இடம்’ என்று ஒரு பழமொழி உண்டு. இதனால் தான் போலும் சீனர்கள் இருக்கும் அவுஸ் திரேலியாவிலும் பொது மைதானங்களில் அவர்கள் உடற்பயிற்சி செய்வதைக் காண முடிகிறது. கூட்டம் கூட்டமாக நின்று அவர்கள் பயிற்சி செய்வதே அழகு தான். உற்றுப் பார்த்தால் 60 களைத் தாண்டியவர்களாகத் தான் அவர்கள் இருக்கிறார்கள். இது அந்த நாட்டின் கலாசாரம்.



பெயர்: அட்டலட்சுமி
வயது 78 (கனடா)
படம்: மாலினி

II ஆம் பக்கம் பார்க்க...

டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
Free
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும்,
எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche,
die sich mit der tamilische Sprache nicht auskennen

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால்
கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில்
இருந்து பெரியோர்கள் வரை
இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde



யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)




19:15– 20:15
6€ Pro Stunde
யேர்மன் மொழியில் பேசவும்
எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு
பயன் உள்ளதாக அமையும்



# மூன்று மூதாட்டிகள்

கடந்த மாதம் மட்டக்களப்பின் வட பகுதி நோக்கிப் பயணமானேன் வாகரை மகா வித்தியா லயத்திற்கும். மூதூரில் அமைந்துள்ள இலங்கை துறை மகா வித்தியாலயத்துக்கும், தம்பல காமம் ஆதி கோணேசர் வித்யாலயத்துக்கும் செல்ல வேண்டி இருந்தது. அந்த அனுபவங்கள் நினைத்து மகிழ் வதற்குரியவை.

இலங்கை துறைமுக மகா வித்தியாலய அனுபவம். அந்த அனுபவங்களை இங்கு முதலில் பகிர்கிறேன் அது உங்களுக்கும் பல தகவல்களைத்தரும். போகும் வழியில் கிடைத்த புதுபுது அனுபவத்தைப் பகிர்கிறேன்.

இலங்கைத் துறைமகா வித்தியாலயம் கடற்கரை ஓரமாக அமைந்திருந்த ஒரு பெரிய வித்தியாலயம் ஆகும். மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்குச் செல்லும் வழியில், பிரிந்து 13 மைல் தூரம் உள்ளே சென்று அந்த கொழும்பு துறை வித்தியாலயத்தை அடைய வேண்டும். செல்லும்போது இந்தத் தூரக் கணக்கு எனக்கு தெரியாது அருகில் தானே என எண்ணியிருந்தேன். வழியில் ஓரிடத்தில் காரை நிறுத்தி அந்த மகா வித்தியாலயத்திற்கு எப்படி செல்ல வேண்டும் என்று அங்கே இருந்தவர்களை வினவினோம்.


**கிராமிய மூதாட்டிகளின் விழிப்புணர்வும், அந்தப் புது அனுபவமும்**

அங்கு கடையில் நின்ற ஒரு பெண். அவனது பெயர் அரசம்மா. ஒரு வயது போன மனுஷியைச் சுட்டிக்காட்டி "இந்த ஆச்சி யை ஏற்றிக் கொண்டு போங்கள் அவர்களின் வீட்டின் அருகில் தான் அந்த வித்யாலயம்" என்றார்

நல்ல வாயாடி மனுஷி அவள். அவனுடைய பேரம் பேசல் அழகாக இருந்தது. ஞாயமாக இருந்தது ஏற்றிப் போவதற்கு கூலி இடத்தை காட்டுவது இதுதான் அந்த பேரம். சரி என அவரை ஏற்றப் போக அவரோடு இன்னொரு பெண்ணும் ஏறிக் கொண்டார்.அவரோடு இன்னொருவரும் ஓடி வந்து. ஏறினார் மொத்தமாக மூன்று பெண்கள்.

காரோ சிறிய கார் அவர்களை இறங்கச் சொல்லவும் மனம் வரவில்லை. பேரத்தில் என்னை அரசம்மா வென்று விட்டாள். என்ன இது அரசம்மா ஒருவரைத் தானே சொன்னாய். இப்போது மூவர் ஆகி விட்டார்கள் என்றேன். பாவம் ஐயா என்று என் இரக்கத்தை அவள் சாதகமாக்கி கொண்டாள்.

பிரதான வீதியில் கடை வைத்திருக்கும் அவள் விரையில் அந்த கடையைப் பெரிதாக்கி விடுவாள். அத்தனை கெட்டித்தனம் அவளிடம் காணப்பட்டது. காரில் ஏறியவர்கள் மூவரும், பார்வைக்கு வயது போன வர்கள் மாதிரி இருந்தார்கள். செல்லும்போது அவர்களின் பெயர்களை வினவினேன்.



பேராசிரியர்
**சி.மௌனகுரு**
(இலங்கை)

ஒரு பெண்ணின் பெயர் வசந்தா தேவி அவருக்கு வயது 58,இன்னொரு பெண்ணின் பெயர் லட்சுமி வயது 65,மற்றும் ஒரு பெண் மோகனவதனி வயது 68, மூவர் முகத்திலும் முதுமைதெரிந்தது. கஷ்டமான வாழ்க்கையின் அனுபவ ரேகைகள் தெரிந்தன.

உங்கள் ஒவ்வொருவருக்கும் எத்தனை பிள்ளைகள்? என வினவினேன். ஒவ்வொருத்தருக்கும் ஏழு பிள்ளைகள் இருந்தனர். பேரப் பிள்ளைகளும் இருந்தனர். பெற்று வளர்த்த ஆயாசம் அவர்கள் உடலிலும் பேச்சிலும் தெரிந்தன. அரை மணி நேரப்பயணம்.உரையாடல் தொடர்ந்தது. கார் சென்று கொண்டிருந்தது, இன்னும் தூரமா இன்னும் தூரமா என்ற கேள்விக்கு, தூரம் என்ற விடை தான் அடிக்கடி கிடைத்துக் கொண்டிருந்தது. உரையாடல் தொடர்ந்தது.

உரையாடலில் மனத் தடைகள் அகல அனைவரும் கலகலப்பாக அவர்கள் மனம் திறந்து உரை யாடத் தொடங்கினார்கள். எங்களுக்கு இதிலே ஏறப் பயம்" என்றார்கள். ஏன் என்று கேட்டேன்.

எங்கேயாவது கொண்டு சென்று விடுவார்கள் "ஐயா காலம் கெட்ட காலம் ஐயா" எனறு அவர்களுள் ஒருவர் கூறினார்.

நீங்கள் வயது போனவர்கள் அல்லவா? உங்களுக்கு ஏன் அந்தப் பயம். இளமாக் கள் என்றால் அந்தப் பயம் நியாயம் என்றேன்.

இல்லை ஐயா எங்களைக் கடத்திக் கொண்டு சென்று உடலுக்குள் இருக்கும் கிட்னியை எடுத்து கொண்டு விடுவார்கள். என்றாள் அந்தப் பெண். போகும் வழியில் பல கிராமங்களைக் கடக்க வேண்டி இருந்தது. விவசாயம், தோட்டம், மீன்பிடி, என்ற தொழில் சார்ந்த கிராமங்கள். ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்கள் சுவராஸ்யமான கதைகள் கூறிக் கொண்டு வந்தார்கள். அத்தகவல்கள் எனக்கு புதிய வாழ்க்கைளைக் காட்டின,ஒருவகையில் அவர்கள் எனக்கு வகுப்பு எடுத்தார்கள். நான் அவர் களிடம் நிறையக் கற்றுக் கொண்டேன்.

புன்னையடியில் இறங்கிக் கொண்டார்கள். வீட்டுக்கு வந்து தேத்தண்ணி குடிக்க விட்டு போகலாமே என்றார்கள். அன்பு அந்த வார்த்தையில் தெரிந்தது:

ஒரு கண நேரத்துக்குள் கிராமிய மூதாட்டிகளின் விழிப்புணர்வு, ஊர் பற்றிய அறிவு,அன்பான உபசரிப்பு

என்பனவற்றை கண்டு கொண்டேன். அவர்களில் யாரும் படித்திருக்கவில்லை. பள்ளிக்கூடம் சென்றிருக் கவில்லை. அந்த வாய்ப்பை இந்தச் சமூகம் அவர்களுக்கு தந்திருக்கவில்லை. ஆனால் அவர்களிடம் கற்றோருக்கான அறிவும் அனுபவமும் மேலாக அன்பும் நிறைந்து இருந்தது.

காரை விட்டு இறங்கிய அவர்கள் அழகாக இளம் பிள்ளைகள் போல கையசைத்து விடை தந்தார்கள்.

---

10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## எமது உடலுக்கு வயதாகி விட்டதா?

மேலும் சீனாவை அரசர் ஆண்டு வந்த காலத்திலே, குறிப்பிட்ட ஒரு வட்டாரம் ஒரு வைத்தியரின் பொறுப்பில் இருக்குமாம். அந்த வட்டாரத்தில் வசிப்பவர்களின் உடல் நிலையைப் பராமரிப்பது அந்த வைத்தியரின் பொறுப்பு. அங்கு உள்ளவர்கள் நோய் நொடியால் பாதிக்கப்படாமல் வைத்தியர் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த வட்டாரத்தில் பலர் நோயால் பாதிக்கப் பட்டால் வைத்தியருக்குச் சம்மள உயர்வு கிடைக்காதாம்.

இதே போன்று பிற்பட்ட காலத்திலும் வைத்தியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படது. இவர்களுக்கு Bear Foot Doctor எனப் பெயர். இங்கு இந்த Doctor கள் குறிப்பிட்ட இடை வெளியில் வீடு வீடாக வந்து யாவரும் சுக பலத்துடன் இருக்கிறார்களா என பரிசோதித்துச் செல்வார்கள். சிறு சிறு உபாதைகளும் உடனடியாகக் கவனிக்கப் படும். இதனால் மக்கள் நோய்களினால் மிகவும் பாதிக்கப்பட பின் வைத்தியசாலையை நோக்கி ஓட வேண்டி வராது.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2023
Tamil Streetfestival
01.09.2023
Fr. 16:00 - 00:00
02.09.2023
SA. 11:00 - 00:00
03.09.2023
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Gemeinsam in Vielfalt
Der Integrationsrat
SIVANDIGITAL
RUHRBEZIRK e.V.
Stadtteil-Schule
VMDO
TKD
ortel MOBILE
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
STS
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 30

**கலாசூரி தி்வ்யா சுஜேன் (இலங்கை)**

எல்லையற்ற அன்பின் அரவணைப்பில் வாழும் கணங்கள் ஏற்படுத்தும் நல்லதிர்வுகளின் ஒற்றைக் கீற்று எங்கோ வாடும் ஓர் மனதை வருடி மகிழ்விக்க வழி சமைக்கும் என்றால் தெய்வம் உண்டென்று நம்பும் பிரார்த்தனை என் உள்ளத்தைத் தழுவுகிறது. அபிநயக்ஷேத்ராவின் பயணம் யாவிலும் நிறைந்து ஒழுகிய கணங்கள் யாவும் அப்படித் தான் இனிமை சேர்த்தன.

அன்பென்று கொட்டு முரசே அதில் அத்தனை பெரும் நிகராம். இன்று அபிநயக்ஷேத்ராவின் பத்து வயது குழந்தை கூறுகிறது பேதைமை வேண்டாம். அன்பு தான் பெரிதென்று. ஆஹா இட்ட மூலதனம் பன்மடங்காய் பெரும் சொத்தாகிக் கிடைப்பதைக் காண்கிறேன். மெய் மட்டுமே உறையும் குழந்தை மனங்களிடையே மொய்த்துக்கிடக்கும் நல்லெண்ணங்கள் நாளை நம் தேசத்தின் சொத்து. இவ்வுலகத்தின் சொத்து.

இம்மாதம் அபிநயக்ஷேத்ராவின் இரு அரங்கேற்ற நிகழ்வுகள் இடம்பெறுகி ன்றன. ஒன்று , இலங்கைத் திருநாட்டின் புகழ் பாடி ”தொன்மாவிலங்கை ” என்னும் கருப்பொருளுடன் கூடிய புதிய மார்க்கம். மற்றையது, ”நாயகி ” என்னும் கருப்பொருளில் பல்வேறுபட்ட நாயகிகள் சித்தரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அரங்கேற்றமும் கடும் உழைப்பின் வெளிப்பாடே. பதினேழு வருட காலத்திற்குள் பதினாறு அரங்கேற்ற நிகழ்வுகளை தொட்டுவிட்ட இத்தருணத்தில், அரங்கேறிய மாணவர்கள் அனைவரையும் அகமேற்றி ரசிக்கிறேன் நன்றியுடன்.

தொன்மாவிலங்கை அரங்கேற்றத்தினை காவியா திலீபன் வழங்குகிறார். காவியா ஆறு ஆண்டுகளாக அபிநயஷேத்ராவில் ஆடல் பயின்று அரங்கேறுகிறாள். கலை



களின் மீது காவியாவிற்கும் அவளது பெற்றோர்க்கும் இயல்பிலேயே மிகுந்த ஈடுபாடு இருந்தது இறையருள்.

பதினொரு வயதே நிரம்பிய காவியாவிடத்தே உள்ள பொறுமையும், புரிந்துணர்வும், குழந்தமையும், உழைப்பும், அவளது பெற்றோர்கள் அள்ளித்தந்த அன்பும், நம்பிக்கையும், ஒத்துழைப்பும் இனிமையும் இன்பமும் சேர்த்திட,

குருநாதர் பேராசிரியர் ஊ.ஏ.சந்திரசேகர் ஐயாவின் முன் ஆடல் சமர்ப்பணம் வழங்கி ஆசிபெற்று, தில்லை சிதம்பரநாதனின் அருள் பெற்று, புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றில் தரிசனம் பெற்று, இந்தியக் கலைஞர்கள் பலரது திறன்சேர்க்கையில் இந்த அரங்கேற்றம் நிகழ்கிறது. இத்தகு நிறை மகிழ்வு தரும் வகையில் அரங்கேற்றப் பயிற்சிக்காலம் அமைவது அரிதே. படைப்பின் பேரருள் உணர்கிறோம்.

நெடுங்கனவின் நிறைவேற்றமாக களிகூட்டி மலர்கிறது ரிஷிகேஷா செம்பையாவின் ”நாயகி“ அரங்கேற்றம். அபிநயஷேத்ராவோடான அனுபவங்களும்,பகிர்ந்து மகிழ்ந்த பெரும் பொருள் விடயங்களும், இணையற்ற பொழுதுகளும், ரிஷிக்கு விண்வாழ்வினைப் பரிசளிக்கும் என்பதில் ஐயமில்லை.

எட்டு வருடங்களாக அதிக பொறுமையுடன் நடனம் பயிலவும் அபிநயஷேத்ராவின் பல நிகழ்வுகளில் பங்குபெறவும் பெருந்துணையாக நின்ற ரிஷயின் பெற்றோர்க்கு எம் நன்றிகளும் பேரன்பும். ஆய்ந்தறியும் பண்பும், பணிவும் நிறைந்த ரிஷியின் ஆடல் அணுகுமுறை தனித்துவமானது. அவள் விருப்புணர்ந்து வடிந்தது “ நாயகி “ மார்க்கம்.

இசையாகி இருளகற்றும் மதிப்பிற்குரிய ராஜ்குமார் பாரதி ஐயாவின் அருந்துணை ரிஷிக்கும் காவியாவிற்கும் அமைந்தது பெருவரம். இலங்காபுரியைப் போற்றி, நம் தாய் நாட்டின் புகழ் பாடி “தொன்மாவிலங்கை “ நாட்டிய மார்க்கம் அமைக்கும் எண்ணத்தினை வியந்து வாழ்த்திப் பாராட்டி பொழிந்த இசையில் வழிந்தது விழிநீர். அதே போல, முப்பெரும் தேவிகள், கொற்றவை, மாதவி முதல் ருக்மிணி தேவி அம்மா வரை, சீதா, நீலமலை, ஆண்டாள், பாஞ்சாலி எனத் தொடுத்த நாயகியாரின் பாத்திரமுணர்ந்த காத்திர இசை தந்தார்.

மகா குரு பேராசிரியர் சந்திரசேகர் ஐயாவின் அடிற்றி அரங்கேறும் அபிநயக்ஷ்டிரா மாணவிகள் நம் தமிழர் தம் பெருமையை பேணிட வந்த செல்வங்கள் என்றே எண்ணத் தோன்றும். ஆய்ந்து, ஆழ்ந்து,தோய்ந்து,தொலைந்து, வியந்து படைத்த அபிநயக்ஷேத்திராவின் மார்க்க உருப்படிகள் பலதும் அகில மகிழ்வு தரும் வண்ணம் காலம் கடந்து சந்ததிகளுக்கு கடத்தப்படும். உரியோர், உணர்வோர் பயனுறுவர். மொத்தமாய் சரணடையும் போது முத்தமிட்டது தழுவிக்கொண்டு நற்கலைச் செயல் பல புரிய என்னைத் தேர்ந்தெடுத்த படைப்பின் மீது மீண்டும் மீண்டும் காதல் கொள்கிறேன். “ உலகளந்த நாயகி தாள் உரைப்பாய் நெஞ்சே”




# International HipHop Arizona Phoenix / USA
# Hiphop ஆட்டத்தில் அசத்தும் தமிழ் பெண் லக்ஷா சன்!

யேர்மனியில் Warendorf நகரில் இருந்து சர்வதே அரங்கில் சாதிக்கும் Hiphop நடனக்குழு Novabeatz .

இவர்கள் யேர்மனியில் பல தடவைகள் German Champion ஆக வந்தவர்கள். America வில் கடந்த மாதம் 47 நாடுகளுடன் நடந்த International HipHop Arizona Phoenix போட்டியில் semi final வரை வந்தவர்கள். இவர்கள் தமிழ் திரையிசைப் பாடல்களுக்கும் நடனமாடி பல மேடைகளில் பாராட்டுப் பெற்றவர்கள். அஸ்வின் சன்.லக்ஷா சன்,இருவரும் தமிழ் பாடல்களுக்கும் நெறியாட்கை செய்து உள்ளனர்.



சன்.லக்ஷா அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதே போட்டிக்கு யேர்மனியில் இருந்து தெரிவு செய்பட்ட குழுவில் சென்று நடனமாடினார். அமெரிக்காவிற்கு இறுதிச் சுற்றுக்கு சென்று, இறுதிச் சுற்றில் வெற்றி பெறவில்லை என்றாலும், இறுதி வரை சென்றமை சிறப்பானதே. யேர்மனியின் சார்பாக பங்குகொண்டதில் பெருமைகொள்வோம்.

(Marcel Nevolani
நடன ஆசிரியர் யேர்மனி)


லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam
EST: 2014

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK


AJ
ENTERTAINMENT
presents
TAKE IT EASY
A.R. RAHMAN LIVE MIT DIR
29.09.2023
WESTFALENHALLEN DORTMUND
GERMANY
TICKETS ARE ON SALE
tamil.de
portal • lifestyle • entertainment
EPIC MONKEYS
eventim



# உங்களிடம் இருந்து விடைபெறுவது விமல் சொக்கநாதன்

கானா பிரபா
(அவுஸ்திரேலியா)

ஈழத்தின் மூத்த வானொலிப் படைப்பாளி விமல் சொக்கநாதன் அவர்கள் ஆகஸ்ட் 1 ஆம் திகதி அகால மரணத்தைத் தழுவிக் கொண்டதை அதிர்ச்சியோடு ஒட்டுமொத்தத் தமிழ் உலகமே எதிர்கொண்டது.

ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் பிறந்த விமல் சொக்கநாதன் அவர்கள் இலங்கை வானொலியின் சிறுவர் மலர் நிகழ்ச்சி வழியாக 1959 ஆண்டு வானொலிக் கலையகத்தில் நுழைந்தவர் என்ற தகவலைப் பகிர்ந்து கொண்டவர் அவரின் வானொலிச் சாகபாடி திரு பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள்.

இலங்கையில் சட்டம் பயிலும் மாணவராக வானொலியின் தேசிய சேவையில் பகுதி நேரக்கலைஞராக இணைந்த விமல், சட்டக்கல்வியை முடித்த பின்னரும் 1971 இல் இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் முழு நேரத்தயாரிப்பாளராக இணைந்து கொண்டார். 1971 ஆம் ஆண்டில் இருந்து 1976 ஆம் ஆண்டு வரையான குறுகிய காலப் பகுதியிலேயே சங்க நாதம், வாலிப வட்டம், இசையும் கதையும் போன்ற நிகழ்ச்சிகளின் வழியாக தமிழ் நெஞ்சங்களின் பேரபிமானம் பெற்ற அறிவிப்பாளராக விளங்கினார். பின்னாளில் புகழ் பூத்த பெரும் படைப்பாளிகளின் கதைகளை இசையும் கதையுமாக அரங்கேற்றிப் பெரும் புகழைச் சம்பாதித்தவர்.

வி.ஏ.அப்துல் கபூர், கே.எஸ்.நடராஜா (ஞானக்கவிஞர் நாவற்குழியூர் நடராசன்) போன்ற மூத்த வானொலி ஆளுமைகளைத் தன் குருவாக நேசித்தவர். அவுஸ்திரேலியாவில் நம்மிடையே வாழ்ந்த இலங்கை வானொலி ஆளுமை திருமதி பொன்மணி குலசிங்கம் (இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதி முன்னாள் இயக்குநர்) அவர்களை மிகுந்த பயபக்தியோடு எதிர்கொள்வார். இலண்டன் பிபிசி தமிழ்க் குடும்பத்தில் தன்னை இணைத்து, உலகத் தமிழ் ஒலிபரப்பில் புடமெடுத்துப் பிரகாசிக்க வைத்த "தமிழ் மாகடல் சங்கரண்ணா" என்ற தமிழோசை சங்கர் என்ற சங்கரமூர்த்தியைத் தன் வாழும் காலம் தோறும் நேசித்தவர் என்பதற்கு அவரது ஒவ்வொரு பேட்டிகளும் சான்று.



விடைபெற்ற எங்கள் ஈழத்து மூத்த வானொலியாளர் விமல் சொக்கநாதன்

இசையும் கதையும் நிகழ்ச்சியில் அவர் குறித்த கதை சொல்லியாகவும், பாத்திரமாகவும் மாறி மாறிப் பயணிக்கும் உத்தியை வெகு சிறப்பாக வேறுபடுத்திக் காட்ட வல்லவர். இவரும், அப்துல் ஹமீதுமாக இசையும் கதையும் நிகழ்ச்சிக்காகப் பாடல்கள், சிறப்புச் சப்தங்கள் கொண்ட ஒலிப் பேழைகளோடு மிகவும் சிரத்தையாகச் செய்து முடித்த களைப்பில் வானொலிக் கலையகத்தை விட்டு வெளியேறும் போது "என்ன இசையும் கதையும் ஒலிப்பதிவா?" என்று கேட்பார்களாம். அவ்வளவுக்கு முகம் அழுது வடிந்த நிலையில் குறித்த படைப்பின் சோகப் பாத்திரமாக மாறி விடுவார்களாம்.

இலங்கை வானொலி நேர்முகப் பரீட்சையில் தனக்குக் கிடைத்த நிரந்தர அறிவிப்பாளர் பதவியை புவனலோஜினி (வேலுப்பிள்ளை) நடராஜசிவம் என்ற புதியவருக்குக் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி விட்டு, ஒலிபரப்பு ஒழுங்கு உதவியாளராக விமல் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டது அவரின் பெருந்தன்மைகளில் ஒன்று என்று இவர் வாழும் காலத்திலேயே தன்னருகில் வைத்துக் கொண்டு அப்துல் ஹமீத் அவர்கள் நெகிழ்ந்திருக்கிறார்.

விமல் சொக்கநாதனின் "வாலிப வட்டம்" நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் பின்னாளில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகவும் விளங்கிய தலைமைத்துவப் பண்பைக் கொண்டதுவும், அவர்களோடு இன்னும் அந்த நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்த நேயர்கள் இன்று தாத்தா நிலையிலும் விமலின் ரசிகர் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வதாகவும் அப்துல் ஹமீதோடு, விமல் சொக்கநாதன் கலந்து கொண்ட ஐபிசி நேர்காணலில் சொல்லி மகிழ்ந்தார். 'அறிவிப்பாளரோடு அரை மணி நேரம்" என்ற புதுமையான இலங்கை வானொலி நிகழ்ச்சி வழி, சக அறிவிப்பாளர்களையும் அவர்களை நேசிக்கும் நேயர்களையும் கலந்துறவாட வைத்து மகிழ வைத்ததும் விமல் சொக்கநாதனின் இன்னொரு பரிமாணம். 1976 ஆம் ஆண்டு லண்டனில் குடியேறிய விமல் சொக்கநாதன் அங்கு தனது சட்டத்தரணியான துணைவியார் சகிதம் ஒரு சட்ட நிறுவனத்தை நடத்தி வந்திருந்தார்.

விமல் சொக்க நாதன் அவர்களின் வானொலி வேட்கைக்குத் தீனி போட்டது லண்டன் பிபிசி.

லண்டன் பிபிசியின் தமிழோசையில் பகுதி நேரமாக நிகழ்ச்சி வழங்குனராகவும் பணியாற்றி வந்தார். இலங்கை வானொலியில் பல்சுவை நிகழ்ச்சிகளை வழங்கிவந்த விமல் சொக்கநாதனுக்கு பிபிசியில் செய்தி



ஒலிபரப்புப்பணி. அவர் ஆரம்பத்தில் பணிபுரிந்த சட்ட நிறுவனத்தின் இயக்குநர், தன்னிடம் சட்ட உதவிகளைத் தேடி வரும் தமிழர்களுக்கு "இவர் பிபிசியில் வேலை செய்கிறார்" என்று பெருமையாக விமல் சொக்கநாதனை அறிமுகப்படுத்துவாராம். சிறந்த அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் தனது சக ஒலிபரப்பாளர்களால் அங்கு அவர் பாராட்டப்பட்டார். இலங்கை வானொலியில் குறுகிய காலத்தில் பெரும்


17 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# நம்பிக்கை நீர்த்துப் போகும் போதுதான்
## அடுத்தவர்களுடன் ஒப்பீடை செய்யத் தொடங்குகிறது மனம்





நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

அலை வேகமாக ஓடி வருகிறது அதை எதிர்கொண்டு ஓடிப் போகிறான் ஒரு சிறுவன். அலை அவனைப் புரட்டிப் போடுகிறது. சத்தமாய்ச் சிரிக்கிறான். உடலெங்கும் உப்புத் தண்ணீர். உள்ளே ஓடிய அலை மீண்டும் அவனைத் துரத்துகிறது, அவன் உற்சாகக் கூக்குரலுடன் அதை எதிர்கொண்டு ஓடுகிறான். ஒரு பந்தயக் குதிரையை அடக்கி விடும் முனைப்புடன் அலையின் முதுகில் தாவுகிறான். மீண்டும் விழுகிறான், எழுகிறான், ஓடுகிறான். அலைகளோடான அவனுடைய விளையாட்டு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

வாழ்க்கையும் இந்த அலை விளையாட்டில் அடங்கி விடுகிறது. விழுகின்ற மறு கணத்தில் எழுந்து ஓடும் சிறுவனைப் போல வெற்றியாளர்கள் தங்களுடைய பயணத்தை மீண்டும் மீண்டும் அலைகளோடு தொடர்கிறார்கள். அழுது கொண்டல்ல, உற்சாகக் கூக்குரலுடன். முயற்சியின் வெற்றிக் கணத்தில் அவர்கள் அந்த அலைகளைத் தாண்டி உள்ளே செல்கிறார்கள். அப்போது கடல் தனது பிரம்மாண்டத்தை அமைதியாய் அவர்களிடம் சமர்ப்பித்து விடுகிறது. அலைகளைக் கண்டு அச்சத்துடன் ஒதுங்கி விடுபவர்கள் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டு வீடு திரும்புகிறார்கள். மூழ்குபவர்கள் மட்டுமே முத்தெடுக்கிறார்கள்.

நதி தனது பயணத்தில் எதிர்படும் எதைக் கண்டும் அஞ்சுவதில்லை. முட்கள் கிழித்து விடுமென கலங்குவதில்லை. ஈரக் கால்களில் பாறைக் கற்கள் மோதுமே என தயங்குவதில்லை. அஞ்சாமல் முன்னேறும் போது கூர்மையான கற்கள் கூட எதிர்ப்பு முட்களை விரைவிலேயே உதிர்த்து விட்டு கூழாங்கற்களாய் மாறுகின்றன. ஓடும் நதி அருவியில் விழுகிறது. விழுகின்ற இடத்தில் காலொடிந்து கிடப்பதில்லை நதி. அதன் ஆக்ரோஷமே அந்த வினாடியில் தான் ஆரம்பமாகிறது.

தண்ணீருக்குப் பயந்து நீச்சலை நிராகரிப்பவர்களும், விழுந்து விடுவோமோ எனும் அச்சத்தில் சைக்கிளைத் தொடாதவர்களும் பயணத்தைத் தொடர முடியாது. அவர்களுடைய வாழ்க்கை காலொடிந்த கிணற்றுத் தவளையாகவே நொண்டியடிக்கும். அச்சம் உங்கள் கால்களைப் பிடித்து இழுக்கும் போது, நம்பிக்கை எனும் கைகள் கொண்டு வெளிச்சத்தை இழுத்து எடுங்கள். அச்சம் என்பது புதை குழி, நம்பிக்கை என்பது விதை குழி ! விளக்



கைக் கொளுத்தி குடத்தால் மூடி வைத்தால், வெளிச்சம் வெளிவருவதும் இல்லை. விளக்கு தொடர்ந்து எரிவதும் இல்லை.

உங்கள் மீதான நம்பிக்கையே உங்கள் வெற்றிக்கான முதல் சுவடு. எத்தனை அடர்த்தியான இருட்டையும் ஒரு சின்ன வெளிச்சம் விரட்டி விடும். எத்தனை இருட்டுகள் வந்து மோதினாலும் ஒரு வெளிச்சம் அணைந்து போவதும் இல்லை.

“உனது வேலை குறை சொல்வது, எனது வேலை சிலை செய்வது“

ஒரு சிற்பி இருந்தான். ஒரு முறை அவனிடம் சென்ற ஒருவர் சிற்பத்தின் மூக்கு சரியில்லை, காது சரியில்லை என குறை கூறிக் கொண்டே இருந்தார். சிற்பியோ எதையும் காதில் வாங்காமல் செதுக்குவதிலேயே குறியாய் இருந்தார். குறை சொன்னவருக்கு கோபம் வந்து விட்டது. ‘இவ்வளவு சொல்றேன் பதிலே சொல்லலையே‘ என்றார். சிற்பி சொன்னார், “உனது வேலை குறை சொல்வது, எனது வேலை சிலை செய்வது. அவரவர் வேலையை அவரவர் சிறப்பாய் செய்கிறோம். அவ்வளவு தான்‘. குறை சொன்னவர் வந்த வழியே போனார்.

சிற்பி தன் மேல் வைத்த நம்பிக்கை சிலையில் தெரிந்தது. அடுத்தவர்கள் எதிர்பார்ப்பது போல சிலையை வடிவமைக்க நினைத்தால் தோல்வியே மிஞ்சும். அல்லது சிலை சிற்பிக்குப் பிடிக்காமல் போய்விடும். சிற்பியின் சிலை பிறருக்குப் பிடிக்காமல் போவது சகஜம், ஆனால் சிற்பிக்கே பிடிக்காமல் போவது துயரம் !

சிலை என்பது வாழ்க்கை. அதைச் செதுக்கும் சிற்பி நாம். நமது வாழ்க்கையை நாம் தான் செதுக்க வேண்டும். அடுத்தவர்களுடைய பாராட்டுக்கா கவோ, விமர்சனத்துக்காகவோ நமது வாழ்க்கையை மாற்றத் துவங்கினால் தோல்வி அங்கே ஆரம்பமாகிவிடும். அடுத்தவர்கள் நமது வாழ்க்கைக் கப்பலை ஓட்டும் சுக்கானாகவோ, நமது பயணத்தை நிறுத்தும் நங்கூரமாகவோ ஏன் இருக்க வேண்டும் ? நம்பிக்கை மனிதர்கள் தங்கள் வாழ்க்கைப்

17 ஆம் பக்கம் பார்க்க...



# நம்பிக்கை நீர்த்துப் போகும் போதுதான்
## அடுத்தவர்களுடன் ஒப்பீடை செய்யத் தொடங்குகிறது மனம்



பட்டத்தின் நூலை தங்கள் கைகளில் தான் வைத்திருப்பார்கள்.

நம்பிக்கை நீர்த்துப் போகும் போது தான் அடுத்தவர்களோடான ஒப்பீடை செய்யத் துவங்குகிறது மனம். அடுத்தவன் என்னை விட உயர்வானவன் என நினைப்பது மட்டுமல்ல, அடுத்தவன் தன்னை விடத் தாழ்ந்தவன் என நினைப்பது கூட தவறான அணுகுமுறையே. ஒன்று தாழ்வு மனப்பான்மை, இன்னொன்று அகந்தை மனப்பான்மை. இரண்டுமே நமக்குத் தேவையில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணாதிசயம், ஒவ்வொரு திறமை, ஒவ்வொரு வாழ்க்கை முறை. அரளிச் செடியில் ஆம்பல் முளைப்பதில்லை. வெள்ளரிக் கொடியில் திராட்சை விளைவதில்லை. ஒவ்வொரு பூவும், ஒவ்வொரு கனியும் அதனதன் இயல்பிலிருந்தே விளைகின்றன. புல்லாங்குழலுக்குத் தான் துளைகள் தேவை, மிருதங்கத்துக்கு அல்ல. ஐயோ எனக்கு துளைகள் இருக்கிறதே என புல்லாங்குழல் புலம்பலாமா ? அல்லது எனக்குத் துளைகள் தான் வேண்டும் என மிருதங்கம் முரண்டு பிடிக்கலாமா ? அடுத்தவர் இயல்பில் நுழைய முயன்றால் தோல்வியே மிஞ்சும். நீரில் வாழ்வது மீனின் இயல்பு, நீரில் தான் வாழ்வேன் என மான்கள் நினைத்தால் அழிவு. எனவே அடுத்தவரோடு உங்களை ஒப்பீடு செய்யாதீர்கள். உங்களை நீங்களே அங்கீகரியுங்கள். நீங்கள் எப்படி இருந்தாலும் அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். காலையில் கண்ணாடியில் தெரியும் உங்கள் முகம் உங்களுக்கு உற்சாகத்தைத் தந்தால், அன்றைய தினம் முழுவதும் உங்களுடைய பயணம் இனிமையாய் இருக்கும்.

அனுபவம் ஆசான் என்பார்கள் உண்மை தான். அதற்காக ஒவ்வொரு தோல்வியையும் அனுபவித்துத் தான் கற்க வேண்டுமென்பதில்லை. தனது தோல்விகளிலில் இருந்து பாடம் கற்பவன் புத்திசாலி. அடுத்தவர் தோல்விகளிலிருந்து பாடம் கற்பவர் அதி புத்திசாலி. தோல்விகள் உங்களுக்குப் பாடங்கள் தான் சொல்லித் தரவேண்டுமே தவிர, பயங்களை அள்ளித் தரக் கூடாது. தோற்காத மனம் வெற்றிகளை ரசிப்பதில்லை. வெயிலே இல்லாத தேசத்தில் நிழலுக்கு என்ன மரியாதை ?

வெற்றி என்பது சிகரத்தை அடைவதில் அல்ல. அந்த சிகரத்தை நோக்கிய பயணத்தில் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பயணத்தில் கிடைக்கும் சுவாரஸ்யமான மலர்களின் சங்கமமே வெற்றி எனும் மாலை. இலக்கை நோக்கிய ஓட்டமே ரசிக்கப்பட வேண்டிய விஷயம். அப்போது தான் ஒவ்வொரு கணமும் உங்களை மகிழ்வுடன் பயணிக்க வைக்கும். அந்தப் பயணத்தில் சின்னச் சின்ன இலட்சியங்களை உருவாக்கி உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள். மைல் கற்கள் என்பவை நீங்கள் எவ்வளவு தூரம் பயணித்தீர்கள் என்பதைச் சொல்லும் அடையாளம் மட்டுமே.

அறிவுரைகள் சொல்வது எளிது.
அறிவுரைகளின் படி வாழ்வது இனிது

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உங்களிடம் இருந்து விடைபெறுவது....

நேயர் வட்டத்தை உருவாக்கியவர். பின்னர் பிபிசி தமிழோசை கேட்கும் உலகத் தமிழ் நெஞ்சங்களின் இதயத்தில் மட்டுமல்ல. ஈழத்தில் போர் முற்றிய நெருக்கடியான சூழலில் அவரது குரலை மின்சாரமில்லா இரவுகளில் ஈழத்தாயகத்தில் உள்ளோர் மறுபக்கச் செய்திகளைக் கேட்பதற்காகத் தவம் கிடந்ததெல்லாம் வரலாறு.

பிரான்ஸை மையப்படுத்திய வசுவு வானொலி மற்றும் தொலைக்காட்சி, வுவுே தொலைக்காட்சி, புவுஏ தொலைக்காட்சி, IBC தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்கங்களும் அவரது வானொலி அறிவுச் சொத்தை உள்வாங்கிப் பயன்படுத்திக் கொண்டார்கள். "மனதைத் திறவுங்கள்" நிகழ்ச்சி வழியாகவும், ஐபிசி சிற்றலை ஒலி பரப்பின் வழியே ஈழத்துக்கு உறவுப்பாலம் அமைத்த "களம் பல காண்போம்" நிகழ்ச்சி வழியாகவும் ஈழத்து மண்ணில் தன் வேரைப் பரப்பினார். அதன் விளைவாக வன்னிக்கு விருந்தினராய் அழைக்கப்பட்டு, ஒரு வாரம் சிறப்பு வானொலி வழிகாட்டல் பயிற்சி நெறியை வன்னியில் உள்ள ஊடகருக்கு வழங்கவும் பயணப்பட்டு அப்பணியைச் செம்மைப்படுத்



தினார்.லண்டனில் வாழும் மூத்த பத்திரிகையாளர் ஈ.கே.ராஜகோபாலின் புதினம் பத்திரிகையிலும் பின்னாளில் தன் இறப்பு நேரும் வரை வீரகேசரியிலும் "விமலின் பக்கம்" என்ற தொடரின் வழியாகவும் யோ்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிகையிலும் சமூக நடப்புகளைத் தன் பாணியில் கொடுத்து வந்தார். 2007 ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட "வானொலிக் கலை" என்பது ஒவ்வொரு ஒலிபரப்பாளன் வீட்டிலும் இருக்க வேண்டிய ஆகச் சிறந்த கையேடு. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பொருள் நிறைந்த வழிகாட்டியாகக் கொண்டு போவார். அந்த நூல் வெளியீட்டு விழாவை சென்னையில் இருந்து, கனடா, சிட்னி காண எடுத்திருந்தார். விமலின் பக்கங்கள் என்ற நூலைத் தொடர்ந்து 'இலண்டனில் இருந்து விமல்" என்ற நூல் எங்கள் விமல் சொக்கநாதன் அவர்களது நிறைவான பங்களிப்பாக அமைந்து தன் தாயத்திலும் விழாக் கண்டு விடைபெற்றுக் கொண்டார்.

"அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்"

பாடல் தன்னை ஈர்த்ததொன்றாகத் தன் வாழ்வியல் பயணத்தை ஒப்பிட்டுப் பார்க்க வைத்ததாக இலங்கை வானொலி "தென்றல்" அதிதியாகப் போன போது விமல் சொக்கநாதன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அதே பாடலில் வந்து போகும் "நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே அது ஒரு பொற்காலம்"

என்று வாழ்ந்து மறைந்த நம் வானொலிக் குயில்களை நினைத்து மனம் பாடுகிறது. காற்றில் கலை படைத்துக் காற்றலையில் சங்கமமாகிய எங்கள் விமல் அண்ணா என்ற விமல் சொக்கநாதன் அவர்கள் உலகத் தமிழ் ஊடகப் பரப்பில் அவர்கள் அழியாச் சொத்தாக விளங்கி நிற்பார்.











# நெடுஞ்சுடர்

## வாசிக்கும் போது அடிக்கடி இந்த அம்மாவா என்று ஆசையோடு முகத்தை அட்டையில் பார்க்க வைக்கும்



மாதவி (யேர்மனி)

ஒரு தாய் என்பவள், கல்லிலோ, மரத்திலோ, செதுக்கிய சிலை அல்ல. தாயானவள் தங்கத்தில் உருக்கி வார்த்த சிலை. தங்கம் தன் வடிவத்தை முழுமையாக இழந்து சிலையாவது போல், ஒரு பெண் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி தன் வடிவத்தை இழந்து உலப்பிலா ஆனந்தமாய் ஒரு தாய் ஆகின்றாள். அதனால்தான் எந்தப் பெண்ணும் தாயானதும் அல்லது தாய்க்கு நிகரானதும், ஒரு தனியழகு பெறுகிறாள். நெடுஞ்சுடர் நூலை வாசிக்கும் போது அந்த அழகை இந்தத் தாய் மீதும் கண்டேன். துன்பத்தை எதிர்கொள்ளும் விதம், அதற்கான மனவுறுதி, துன்பத்திலும் அழகைக்க காணவைத்தது.

இங்கு அமரர் சிவா தியாகராஜா அவர்களது வரலாற்றைப் படிக்கும் போது, ஒரு தாயாக, எனது தாயாக, எமது தாயாக பல இடங்களில் முகம் காட்டுவதைக் காண முடிகிறது. அதற்குக் காரணம் ஒரு தாய், தங்களது தாய் என்பதற்கும் அப்பால், வாசிப்பவர் எல்லோருக்கும் தாயாக உணரும் வண்ணம், எழுத்துகள் அந்நியப்படாது எழுதப்பட்டுள்ளன.வாசிக்கும் வாசகர்கள் யாவரும் தமது தாய் தம் கைக்குள் புன்னகையுடன் பூத்திருப்பதாக உணர்வர்.

நூலை வாசிக்கும் போது, இடையிடையே வாசிப்பதை நிறுத்தி, முன் அட்டையில் இருக்கும், தாயின் புன்னகையைப் பார்ப்பதும், மீண்டும், நெஞ்சைத் தொடும் தாயின் செயலை வாசிக்கும் வேளை அல்லது ஒரு துன்பத்தை தாங்கியவண்ணம் வாழ்வைத் தாங்கி செல்லும் இடங்களை, வாசித்துக் கடக்கும் வேளை மீண்டும் முன்னட்டையைத் திருப்பி தாயின் முகம் பார்க்க வைக்கும் வண்ணம், முன்னட்டையும், எழுத்தோட்டமும் அமைந்திருப்பதைக் காணலாம். இதற்காக முன்னட்டையை வடிவமைத்த பேரன் துமிலன் செல்வகுமாரனையும், உள்ளடக்கத்தை உள்ளம் தொடத் தொகுத்த மகள்மார் சந்திரவதனா செல்வகுமாரன், சந்திரா இரவீந்திரன் அவர்களையும் பாராட்டவே வேண்டும்.

இந்த நூலில் ஒரு சில இடங்களை மட்டும் தருகிறேன். வாசிக்கும் போது சிவா தியாகராஜா அவர்கள் யாருடையதோ அம்மா என்ற எண்ணம் மாறி, ஒவ்வொருவரும் உங்கள் அம்மாவாகவே உணர்வீர்கள்.

‘எங்கள் வீட்டுக் குசினிக்குள் சமையல் மேடையின் அருகே ஒரு பச்சைப் பெட்டகம் இருக்கிறது. சமைத்த உணவுகளை, அதற்குள்தான் அம்மா, பூனை, நாய், கோழி... எதுவும் தீண்டிவிடாது பத்திரப்படுத்தி வைப்பா. அந்தப் பெட்டகம் எப்போதும் எனது சிம்மாசனமாகவே இருந்தது. பாடசாலைக் காலங்களில் அதன் மேல் இருந்துதான் அம்மா சமைக்கும் பொரியல்களையும் கரியல்களையும் ஆவி பறக்கப் பறக்க எடுத்துச் சுவைத்தபடி அம்மாவோடு கதையளந்து கொண்டிருப்பேன். கர்ப்பமாகிய பின் கூட அம்மா சமைக்கும் போது அந்தப் பெட்டகத்தின் மேல் தான் இருப்பேன். அம்மா சுடச்சுடச் சோறு சமைத்து, கீரையைக் கடைந்து, எல்லோரும் வர முன்னரே ‘சாப்பிடு, கீரை பிள்ளைக்கு நல்லது‘ என்று சொல்லித் தருவா. அம்மா எனக்குச் செய்தவை எண்ணிலடங்காதவை. சொல்லித் தீராதவை. அதையெல்லாம் திருப்பி அம்மாவுக்குச் செய்வதற்கு அம்மா இன்னும் எத்தனையோ காலங்கள் என்னோடு வாழ்ந்திருக்க வேண்டும்.

### ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு விதமான ஆசைகள்

காலையில் நாங்கள் எழும்பும் போது அம்மா ஆட்டுப்பால் தேநீரை நுரைபொங்க ஆற்றிக் கொண்டிருப்பா. அதற்கு முன்னரே தனது வேலைகளை முடித்து காலைக் கருக்கலுக்குள்ளேயே ஆட்டில் பால் கறந்து, காய்ச்சி, தேநீர் தயாரித்திருப்பா. நாங்கள் எட்டுப் பிள்ளைகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசைகள், தேவைகள், விருப்பங்கள். அந்தத் தேநீரில் கூட எனக்கு பாலின் ஆடை வந்தால் பிடிக்காது. அண்ணனுக்கு ஆடைதான் விருப்பம். தம்பி பார்த்திபனுக்கு பொட்டுக் கிளாசுக்குள்தான் தேநீர் வேண்டும். வேறெதிலும் குடிக்க மாட்டான். அப்படியான எங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட அம்மா தயங்கியதேயில்லை. எங்கள் எல்லோரது விருப்பங்களுக்குமேற்ப தேநீரை ஊற்றித் தருவா. காலைச் சாப்பாடு முடிய பாடசாலைக்குப் போய் விடுவோம். மதியம் வீட்டுக்கு வரும் போது சுடச்சுடச் சோறு, கறிகள், பொரியல்... என்று சாப்பாடு அமர்க்களமாக இருக்கும். அம்மாவின் சமையலுக்கு அப்படியொரு வாசனையும் சுவையும் இருக்கும். அவைகளை நினைத்தால் இப்போதும் வாயூறும்.

நான் அம்மாவிடம் போகும் பெரும்பாலான பொழுதுகளில் அம்மாவின் நெஞ்சில் ஏதாவதொரு புத்தகம் விரித்த படி கவுண்டோ அல்லது ஜபட் திறந்த படியோ இருக்க அம்மா ஆழ்ந்து உறங்கிப் போயிருப்பா. அம்மாவின் தலைமாட்டில் வெற்றிமணி, மண் சஞ்சிகையில் தொடங்கி புதிது புதிதாக வெளிவந்த ஈழத்து நூல்கள் பலவும் இருக்கும். கட்டிலினருகில், சிறிய அலுமாரியின் மேற்தட்டில், இடைத்தட்டில், மேசையில், சைட்போர்ட்டில்... என்று எல்லா இடங்களிலும் புத்தகங்கள் இருக்கும்.




### சந்திரவதனா (மகள்)

‘இராணுவம் எம்மைச் சூழ்ந்திருந்த அந்தக் காலங்கள் எத்தனை பயங்கரமானவை! அந்த இக்கட்டான காலத்திலும் தனியாளாக நின்று எங்கள் குடும்பத்தை மட்டுமல்ல, மக்களின் விடுதலைக்காக அயராது உழைத்துக் கொண்டிருந்த ஏராளம் இளைஞர்கள் யுவதிகளையும் பாதுகாப்பதற்காக அம்மா செய்தபணிகள் அளப்பரியவை. அப்போது அம்மாவுக்கிருந்த மனத்தைரியமும் செயற்திறனும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை.

1985,1986 தம்பி பரதன் (மாவீரன் மொறிஸ்) ஒரு தடவை தன் தோழர்கள் இருவரோடு வீட்டுக்கு வந்திருந்த போது பருத்தித்துறை ஹாபர் முகாமிலிருந்து ‘ஷெல்‘ வீச்சு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நாங்கள் எல்லோரும் பங்கருக்குள் குதித்து விட்டோம். அம்மாவும் பரதனும் தோழர்களும் எங்கள் வீட்டுப்பெரியவிறாந்தாவின் விளிம்பில் இருந்து பேசிக்

28 ஆம் பக்கம் பார்க்க... »


# நவீன பதிப்புத்துறை வெளியீடாக வெற்றிமணி

சமகால விடயங்களை உள்ளடக்கிய நவீன பதிப்புத்துறை
வெளியீடாக யேர்மன் ‘வெற்றிமணி’ ஒலிக்கிறது.
படிக்கும் காலத்தில் வாசித்த பின்னர் எழுதிய திரு மு.க.சுப்ரமணியம் ஐயா
அவர்களின் ‘வெற்றிமணி’ நினைவுகள் மறக்க முடியாதவை.
தந்தையும் தனயனும் பாராட்டுக்குரியவர்கள்.

அன்புடன்
திக்குவல்லை கமால்
(இலங்கை. 20.08,2023)




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

அதிசய உலகம் 01



# விண்வெளிக்கு காப்பி குடிக்கப் போவோமா?

அடுத்த விடுமுறைக்கு எங்கே போக இருக்கின்றீர்கள். நீங்கள் வசிக்கும் நாட்டில் இருக்கும் ஒரு ஊருக்குப் செல்வீர்கள் அல்லது அதிகபட்சம் வெளிநாடுகளுக்குச் செல்வீர்கள், சரி தானே? ஆனால், எப்பொழுதாவது விண்வெளிக்குப் போகலாம் என்று யோசித்துப் பார்த்திருக்கின்றீர்களா? இல்லை தானே? நண்பர்களே, எதிர் காலத்தில் விடுமுறைக்கு விண்வெளிக்கும் போக சிந்திப்பார்கள் என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அது எப்படி என்று அறிய விரும்பினால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

எதிர்காலத்தில் விடுமுறைக்கு விண்வெளிக்குப் போகப் போகிறார்கள் என்று கூறியிருந்தேன். அது எப்படித் தெரியுமா? நீங்கள் நினைப்பது போல் ராக்கெட்டில் பயணிப்பதில்லை! இதற்கென்றே ஒரு உயர்த்தியை (Elevator) அமைக்க இருக்கின்றார்கள். இந்த உயர்த்தியுடன் பூமியின் தரையில் இருந்து 80,000 கி.மீ. மேல் நோக்கிச் சென்று, அங்கே ஜாலியாக ஒரு சோடா குடித்துவிட்டு மறுபடியும் புவியை நோக்கிச் செல்லப் போகின்றார்கள்.

நீண்ட காலமாக இப்படி ஒரு உயர்த்தியைக் கட்டுவதற்குச் சாத்தியமே இல்லை என்று எண்ணி இருந்தார்கள். அதுவும் நியூட்டனின் இயக்க விதிகளின் அடிப்படையில் இந்த உயர்த்தியை இயக்க உதவும் கேபிள்கள் அறுந்துவிடும் என உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், நவீன ஆராய்ச்சிப் படி கார்பன் நானோகுழாய்கள் (Carbon nanotubes) உதவியுடன் இந்தத் திட்டத்தை செயல்படுத்தமுடியும் என்று தெரியவந்தது. தற்போது விஞ்ஞானிகளால் ஒரு சில சென்டிமீட்டர் கார்பன் நானோகுழாய்களைத் தான் உருவாக்க முடிந்தது. ஆனால், கொஞ்சக் காலம் கடந்து 2070ம் ஆண்டி ற்குப் பின்பு, இப்படி ஒரு உயர்த்தியை நிச்சயம் உருவாக்க முடியும் என்பதைக் கூறியிருக்கிறார்கள். இது ஆச்சரியமாக இல்லையா நண்பர்களே?



எனவே, "வா மச்சான் விண்வெளிக்குச் சென்று ஒரு காப்பி குடித்துவிட்டு வருவோம்" என்று எதிர்காலங்களில் கேட்கத் தான் போகிறார்கள். ஆனால், நாங்களும் அதே போலக் கேட்பதற்கு 2070ம் ஆண்டில் இருப்போமா என்று தான் தெரியவில்லை. சரி பொறுத்திருந்து பார்ப்போமே"

இனி நீங்கள் கூறுங்கள், இப்படி ஒரு உயர்த்தியில் பயமில்லாமல் விண்வெளிக்குச் சென்று பார்ப்பீர்களா?

# சிரி.. சிரி.. சிரி..: சிரிப்புக்குப் பின்னால் இருக்கும் அறிவியலும் என்ன?

அதிசய உலகம் 02





மனம் விட்டுச் சிரிப்பது போல் ஒரு சிறந்த விஷயம் இல்லவே இல்லை! ஒரு மணி நேரம் சிரிப்பதும், அரை மணி நேரம் பாரம் தூக்குதலும் (weight lifting) ஒன்று என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அது ஏன் என்றால், இரு வேளைகளிலும் எரிக்கப்படும் கலோரியின் அளவு ஒன்று எனக் கணக்கிட்டுள்ளனர். எனவே, ஒரு ஆண்டிற்கு ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் சிரித்து வந்தால், ஐந்து கிலோ வரை எடையைக் குறைக்கலாம் என்கிறது ஆராய்ச்சி. மனம் விட்டுச் சிரிப்பது ஒரு விதமான ஏரோபிக் (aerobic) உடற்பயிற்சி ஆக அமையும் என்கிறார் நரம்பணுவியல் மருத்துவர் டாக்டர் ஹெலன் பில்செர் (Helen Pilcher). அவ்வாறு சிரிப்பதின் காரணமாக இதயத் துடிப்பு வேகமாகி, உடல் முழுவதும் உள்ள பாகங்களுக்கு இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. மேலும் சிரிக்கும் போது மார்பு ஏறி இறங்கி, வயிற்றுத் தசைகளும் இறுக்கம் அடைகிறது.



சிரிப்பின் நன்மைகள் இவ்வளவு தான் என்று நினைத்து விடாதீர்கள்! சிரிப்பதற்கு குறைந்தது 15 முக தசைகள் தேவைப் படுகின்றன. இதனால் முகம் மிருதுவாகவும், பிரகாசமாகவும் மிளிரும். மேலும், இது உடலுக்கு நலம் தரும் என்டோர்பின் (endorphine) உற்பத்தியை தூண்டி, மன அழுத்தத்தையும் குறைக்கிறது. இதை விட சிரிப்பது இதயத்திற்கு மிகவும் நன்று என வேறு சில ஆராய்ச்சிகள் சொல்கின்றன. உடற்பயிற்சி மற்றும் கொழுப்பு குறைக்கும் மருந்துகள் இரத்த ஓட்டத்தை அதிகரிப்பது போலவே, உரக்கச் சிரிப்பதும் இரத்த சுழற்சியை அதிகரிக்கிறது. இப்படிச் சிரிப்பதால் உடல் மற்றும் மனம் நிம்மதி பெற்று, நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும்.

வாய் விட்டுச் சிரித்தால், நோய் விட்டுப் போகும் என்று இதைத்தான் பெரியவர்கள் பல நூற்றாண்டுக்கு முன்பே எழுதிவைத்தார்களோ, என்ன? சரி நண்பர்களே, சிரிப்பது உடலுக்கு மிகவும் நல்லது என்பதை அறிந்துவிட்டீர்கள்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)


# மணிவிழா அழைப்பிதழ்

பிரதிஷ்டா கலாநிதி பக்குவத்திருமணி சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்
ஸ்ரீமதி மதிவாணி அம்மா தம்பதிகளின் மணிவிழா வைபவ அழைப்பிதழ்

இடம்: ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலய கலாசார திருமண மண்டபம் (Siegenbeck Str 4-5,59071 Hamm)

காலம்: 16.09.2023 சனிக்கிழமை

நேரம்: மாலை 15.00 மணி - 20.00 மணிவரை

அன்புடன் அழைக்கின்றோம்

ஷஷ்டியப்த பூர்த்தி
மணிவிழா குழுவினர்
சத்சங்க உறுப்பினர்கள்
ஆலய தொண்டர்கள்



தொடர்புகளுக்கு: சிவஸ்ரீ சுகிர்தன் ஐயா அழகேசக்குருக்கள் /0049 152 36881255

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main



Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# இலக்கியத்தில் இவர்கள்...

37



கௌசி (யேர்மனி)

# ஏனிந்த மரதனோட்டம்?



ஒரு மரணத்தின் காயம் மாறும் முன்னே, காயத்துக்கு மருந்து தர வேண்டிய இயற்கையானது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் அடுத்த மரணத்தைத் தந்து விடுகிறது. ஒன்றை எண்ணிக் கலங்கும் வேளையில் அடுத்த இழப்பு பெரிதாக முன் வந்து நின்று பழையதை மறைத்து விடுகின்றது. இயற்கையின் அற்புத தொழிற்பாட்டை எண்ணி வியந்து போகின்றேன். ஒருவர் இறப்பில் உறவினர் நண்பர்கள் கவலையில் தோய்ந்து போனாலும், இறந்தவர்களின் குடும்பத்தினர் உடைந்து போகின்றார்கள். காலப் போக்கில் சம்பவமாக மார்வல் படங்களில் மனிதர் சாம்பலாகிப் பறந்து போவது போல் இறந்தவர்கள் உலக மனங்களில் இல்லாமல் போகின்றார்கள். இல்லை மறைந்துதான் போகின்றார்கள்.

காலன் தனக்கு ஒரு காரணத்தை வைத்து உயிர்களை அழைத்துச் செல்லுகின்றான். இதெல்லாம் கௌசி ஏன் இன்று நினைக்கின்றாள் என்றால் காதலை எழுதினேன். திருமணத்தை எழுதினேன். குழந்தைச் செல்வங்களை எழுதினேன். வாழ்க்கையின் ஓட்டத்தை எழுதினேன். வாழ்க்கை ஓட்டத்தின் முடிவில் வரும் உலகத்தின் வாழ்க்கை ஓட்டையை என்பதை எழுத வேண்டாமா?

கண்ணதாசன் சொல்லாத செய்தி என்ன தான் புதிதாக இருக்கின்றது. குழந்தையாய் மனிதன் தோன்றியதில் இருந்து மரணத்தில் மடியும் வரை வாழ்க்கைப் போராட்டம் அத்தனையும் தந்தார். அவரே ஆடும் வரை ஆட்டம் ஆளுக்கொரு நாட்டம். ஆம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் நாட்டம். அதேபோல் ஆளுக்கொரு தேதி வைத்து வைத்து ஆண்டவன் அழைப்பான். அன்று சொல்ல வந்த செய்தியை இன்று வாழும் காலம் புரிந்தும் புரியாதது போல் ஏனிந்த ஓட்டம். ஏனிந்த நாட்டம். இவையெல்லாம் ஏன் என்பதே எனக்குள் எழுகின்ற கேள்விக் குறியாக இருக்கின்றது.

காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே என்றார் பட்டினத்தார். எமக்காக இல்லை. எம்முடைய எதிர்காலத்துக்காக என்று ஓடுகின்ற ஓட்டத்திலே எதிர்கால தொழில்நுட்பம் எம்மை அழிக்கத்தான் போகிறது. உண்மையில் அன்பும் பாசமும் உள்ள எத்தனை பேருக்கு எம்முடைய தாத்தாவைத் தெரியும்? பாட்டனைப் புலியும்? இருந்தாலும் எதையோ தேடி ஓடுகின்றோம். ஓட்டத்தின் முடிவில் ஓடியவர் யாரென்று நாளைய சமுதாயம் கேட்கும் கன்னத்தில் ஆட்காட்டி விரலை வைத்துச் சிந்தித்து நிற்கும். இறந்தவர் எழுத்தாளனாக இருந்தால், அவர் எழுதும் பத்திரிகை அவரின் பக்கத்தில் வேறொரு எழுத்தாளருக்கு இடம் கொடுக்கும், பாடகனாக இருந்தால், பல பாடகர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும், ஒருவர் பஸ்பமாகிப் போக அவரிடத்தில் வேறொருவர் ஜொலிப்பார். இதுவே இயற்கையின் நியதி. இதுவே வாழ்க்கையின் மரதனோட்டம்.

**யாவும் இந்த உலகில் பொய்தான்.**

**நீயும் பொய்யா நானும் பொய்யா**
**நினைத்துப் பார்த்துச் சொல்லடா.**
**வாயும் பொய்யா வயிறும் பொய்யா?**
**வாயும் பொய்தான் வயிறும் பொய்தான்**
**மாய உலகில் மயங்கும் மனிதா**
**யாவும் பொய்யே தானடா**

**உனக்கெது சொந்தம்**
**எனக்கெது சொந்தம்**
**உலகத்துக்கெதுதான் சொந்தம்.**
**நீட்டியே காலை நெருப்பிடும்போது**
**நேசம் பாசம் பொருளாசைக்கெல்லாம்**
**காட்டிய ஒருபிடி வாய்க்கரிசியிலே**
**கணக்குத் தீர்ந்திடும் சொந்தமடா.**
**மூச்சு நின்னா முடிஞ்சுதடி சொந்தம்.**

என்று என்று வாழ்க்கைத் தத்துவத்தை கண்ணதாசன் அழகாகப் பாடியுள்ளார்.

காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா என்றார் ஒரு சித்தர். “நானும் ஒரு கனவோ இந்த ஞாலமும் பொய்தானோ“ என்றார் மகாகவி பாரதியார்.

கவனம் கவனம் இதை செய்யாதீர்கள். அதைச் செய்யாதீர்கள் என்போர் எல்லாம் சொல்லிய நாளைந்து மாதங்களில் சொல்லிழந்து மண்ணுக்குள் அடக்கமானார். செய்தி தருபவரே செய்தியாகிப் போகின்றார். இதுதான் வாழ்க்கையை வாழுங்கள் என்று மனம் அடித்துக் கொள்ளுகிறது. உலகம் இறப்புக்கு காரணமாய் விதியைச் சாட்டும், பல சாத்திர விளக்கங்களும் கூறும். விதியை வெல்லலாம் என்பார்க்கு விதியை வெல்வாய் என்று ஒரு விதி இருந்திருக்கும். புத்தரிடம் பாம்பு தீண்டி இறந்த மகனை உயிர்ப்பித்துத் தரும்படி சுஜாதை கேட்கின்றாள்.

**விடமேறி மடிந்ததென**
**விளம்புகின்றார் சிலரே**
**விதியாலே விளைந்ததென**
**விரிக்கின்றார் சிலரே,**
**தடையில்லை இதுமூடு**
**சன்னியென்றார் சிலரே,**
**சஞ்சீவி அளித்தாலும் சாமென்றார்**
**சிலரே. என்று புலம்பி நின்றாள்.**

காலச்சனியோ, காரண விபத்தோ, விதியின் பலனோ எதுவாக இருந்தாலும் நடப்பது நடந்தேயாகும். இது இயற்கையின் நியதி.

**சுஜாதைக்கு புத்தர்**

**நாவிய கடுகுவேண்டும் – அதுவுமோர்**
**நாவுரி தானும் வேண்டும்**
**சாவினை அறியாத – வீட்டினில்**
**தந்ததா யிருக்கவேண்டும்!**

இவற்றைக் கொண்டு வந்தால் உயிர்ப்பித்துத் தருவேன் என்கிறார். தேடினாள், தேடினாள். ஓடினாள், ஓடினாள். ஒவ்வொரு வீட்டு வாசலையும் தட்டினாள். இறுதியில் உணர்ந்தாள். ஞானம் பெற்றாள். உயிர் என்பது தரித்து நிற்காத ஒன்று. சில காலம் ஒரு உடலை இயக்கும் சக்தி. அது பிஞ்சாக, காயாக, கனியாக, பழமாக இயற்கைக் கட்டளையின் படி உடலுக்கு உரிமையின்றி உறவுக்குத் தொடர்பின்றி பிரிந்து போகும் என்னும் உண்மையை உணர்ந்து மகனைத் தீயிலிட்டாள்.

மகாபாரத யுத்தத்திலே அர்ச்சுனன் எதிரே நிற்கும் படைகளைப் பார்க்கின்றான். எல்லாரும் உறவினர்கள். உறவுகளைக் கொன்று நான் உயிர் வாழ்வதா என்றுத் தயங்கிப் பலவாறாகப் போர் செய்ய இயலாது என்று கண்ணனிடம் கூறி அம்பறாத்தூணியை நழுவ விடுகின்றான். அப்போது கண்ணன்

**நீ விட்டு விட்டாலும் அவர்களின் மேனி,**
**வெந்து தான் தீரும் ஓர் நாள்**

என்று கண்ணன் கூறுகின்றான்.

**இடையின்றி அணுக்களெல்லாம்**
**சுழலுமென**
**இயல் நூலார் இசைத்தல் கேட்டோம்**
**இடையின்றிக் கதிர்களெலாம்**
**சுழலுமென**
**வானூலார் இயம்பு கின்றார்**
**இடையின்றித் தொழில்புரிதல்**
**உலகினிடைப் பொருட்கெல்லாம்**
**இயற்கை யாயின்**
**இடையின்றிக் கலைமகளே நினதருளில்**
**எனதுள்ளம் இயங்கொ ணாதோ?**

என்றும் பாடிய பாரதியார் 36 வயதிலே இயங்காமல் போய்விட்டார்.

**காலா உன்னை நான்**
**சிறு புள்ளென மதிக்கிறேன்**
**காலருகே வாடா சற்றே**
**உன்னை மிதிக்கிறேன்**

என்றுதைரியமாய்ச்சொல்லியானையால் மிதியுண்டு இறந்தார்.

28 ஆம் பக்கம் பார்க்க...









## வானத்தாய்

சிறகுகளில் ஏந்திய பகலை
இரவுகளில் களையும்
பறவையின் தேடலென
நடுக்கமுறும் மழையிரவில்
கூடு கொடுத்த கிளையின்றி
இருண்டு கிடக்கிறது வானம்.

அடர்ந்து விரியும் சூரியனின்
அந்திமத்தை
அலைவுறும் சிறு
மின்மினிகளின்
ஒளிகொண்டுதான்
துடைத்தெறிய வேண்டும்.

தூரத்தில் கரிய மேகங்களின்
சன்னதம்
இடையறாத மோதல்
இழை நார்கிழியும்
பறையோசை
எழுந்தாடும் மின்னற்கீற்று,
இவற்றினிடையில்
அந்தரத்தில் பறந்தலையுமென்
மனவீடெங்கும்
நினைவுகளின் பெருநதி
அங்கு சலசலக்கும் நீர்மேட்டில்
மார்கழி மேகத்தின் ஆட்சி
உடல் சிலிக்க
மயிர்க்கூச்செறியும் இந்தத்
தேகத்தை அடக்கியபடி
தொடுவான வெளியெங்கும்
வியாபித்த உன்னிடம்
கதைபேச விளையும்
ஊமைச் சிறுமி நான் !
வானத்தாய் நீ !!



சர்மிலா வினோதினி

# யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்

## சாதனையாளர் விருதும் (௨0௨௩) புத்தக வெளியிடும்











ச.சிவவினோபன்

19.08.2023 அன்று யேர்மனி டோட்முண்ட் நகரில்,யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் இரண்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர் கவிச்சுடர் திரு. அம்பலவன்புவனேந்திரன் அவர்களுடைய இரண்டு புத்தக வெளியீடும், அதைத் தொடர்ந்து, யேர்மனியில் தமிழ், கலாச்சாரம், மொழி, பண்பாடு என்று சமூக மேண்பாட்டில் தம்மை இணைத்து நீண்ட நாட்களாக இன்றும் தொடர்ச்சியாக சேவை ஆற்றி வருகின்ற நான்கு தொண்டாளர்களிற்கு, இந்த வருடத்தின் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தனர். இந் நிகழ்வு கவிச்சுடர் திரு. அம்பலவன் புவனேந்திரன், ஆசிரியை திருமதி. சாந்தினி துரையரங்கன் மற்றும் புத்தறிவாளன் சி.சிவவினோபன், இவர்களின் கூட்டணியில் நிகழ்ச்சி அமைப்பு மிக சிறப்பாக இருந்தது என்று அனைவரும் பாராட்டினர்.

திரு. ஏலையா க. முருகதாசன் அவர்களின் தமிழ் பயணம், அவருக்கு எவ்வாறு ஏலையா என்ற பட்டம் கிடைத்தது, அவர் எழுத்து துறையில் இருந்து நடிப்புத் துறைக்கு சென்று செய்த சாதனைகள், இளம் வயது சாதனைகள் என்று அனைத்தையும் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகிய திருமதி. ஜெயாநடேசன் அவர்கள் விரிவாக வழங்கினார். அதைத்தொடர்ந்து பாவலர் திருமதி. கீதாராணி பரமானந்தம் அவர்களுடைய தமிழ் பயணம், கவிதை ஊடாக இசைக்குள் சென்று, வீணை மூலம் விண்ணைத் தொட்டு, யேர்மனியில் வந்து ஆசிரியராகி, அத்தோடு மரபுக் கவிதையில் இன்று சிறந்து விளங்குகின்ற கீதாராணி பரமானந்தம் அவர்கள் பெற்ற மிகப்பெரும் பட்டம் தன் பிள்ளைகளிற்கு தமிழ் மொழி சிறப்பாக கற்றுக் கொடுத்தவர் என்ற பட்டமே என்று, அழகாக அவரைப் பற்றி புத்தறிவாளன் சி. சிவவினோபன் கௌரவித்தார்.

திரு.சுப்பிரமணியம் பாக்கியநாதன் அவர்களுடைய 30க்கும் மேற்பட்ட வருடக்கணக்கான சாதனைகளை துல்லியமாக சிறு வயது விளையாட்டுத் துறையில் செய்த சாதனைகள் முதல், வெளிநாட்டில் அரசியல், தமிழ், பாடசாலை என்று பன்முகச் சேவைகளையும், தொலைக்காட்சி, காணொளி பதிவு, குறும்படம், வானொலி என்று பலதுறை சார்ந்த திறமைகளையும் அழகாக எடுத்துரைத்த ஆசிரியை திருமதி. சாந்தினி துரையரங்கன், 23 நிமிடங்கள் மழை போன்று பொழிந்து தள்ளினார். இது அரங்கத்தையே சுவாரசியமாக மேடையை நோக்கி கவர்ந்து ஈர்த்தது.

இறுதியில் ஜெர்மன் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகிய திரு. பொன்னுதுரை சிறீஜீவகன் அவர்களை, அவர் தாயகத்தில் செய்த சாதனை, மற்றும் அவருக்கு கிடைத்த துன்பங்கள், சிறை தண்டனை, அனைத்தையும் தாங்கி தமிழ் தான் தன் மூச்சு என்று தொடர்ந்தும் தான் கொண்ட கொள்கையில் மீறாது,இன்றும் தனி ஒருவராக பல சாதனைகளை தமிழ் சார்ந்து செய்து கொண்டிருக்கின்றார் என்று, மண் பத்திரிகையின் ஆசிரியர் திரு. வைரமுத்து சிவராசா அவர்கள் அழகாக கௌரவித்தார்.

இவ்வாறே அழகாக கவிச்சுடர் திரு. அம்பலவன்புவனேந்திரன் அவர்களின், இரண்டு புத்தகத்தின் வெளியீட்டை திரு. தியான் மற்றும் திரு.இரா.சம்மந்தன் அவர்கள் ஆரம்பித்து வைக்க, இரண்டாம் நிகழ்சி நான்கு சாதனையாளர்களைக் கௌரவித்தது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் 19.08.2023 ஜெர்மனி டோட்முண்ட் நகரில் மிகச் சிறப்பாக, பிரம்மாண்டமாக நடந்ததேறியது.






# அவள் நல்லாப் பிட்டவிப்பாள்

சிவகுமாரன் (யேர்மனி)

அப்பம் சுட்டுவித்த அன்னம்மாவின் படம் மாலைபோடப்பட்டு சுவரில் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டு இருந்தது. அடுப்புச் சூட்டில் சுருங்கிப்போன முகத்தில்கூட தன் மகளை பட்டதாரியாக்கியதன் மகிழ்சி விரிந்து கிடந்தது.

தந்தை அதிகாலை தோட்டத்திற்கு துலாமிதிக்கச்சென்று கால்தடக்கிவிழுந்து இறந்ததும்,வாழ்கை கண்ணீர் ஆனதும் எனக்கு இன்றுபோல் தெரிகிறது.

அன்னம்மாவின்தன்மானமும்மனஉறுதியும் எவரிடமும் கை ஏந்தவிடவில்லை. தன் மகளைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று தன் வாழ்வை தினமும் தீயில் நீராட்டி இடியப்பம் சுட்டு மகளைப் படிக்கவைத்தாள்.

அப்பக்காறி அன்னம்மா என்று ஊரார் அழைக்கும் போது எல்லாம் மகள் அகிலாவிற்கு வெட்கம் தாங்க முடிய- வில்லை. அந்த வெட்கம் நீண்டகாலம் நிலைக்கவில்லை. அதுவே அவள் நெஞ்சில் எதிர்காலத்தில் கல்வியிலும், சமூகத்திலும் உயாவாக வாழவேண்டும் என்கின்ற இலட்சியவேட்கையை உருவாக்கியது.

ஆண் ஆதிக்கத்தால் அமுக்கப்பட்டு அன்று ஆசிரியர் தொழிலைக் கூட பார்க்க முடியாது தன் கணவனாலும் தந்தையாலும் தடுக்கப்பட தன் அன்னை, அடுப்பம்கரையில் நெருப்புக்குளிக்கும் நிலைக்கு தள்ளப் பட்டதையும் நினைத்த போது அன்று அந்த சமுதாயத்தை அடியோடு மாற்றவேண்டும் என்ற மனம் அவள் உள்ளே புயலாக வீசத் தொடங்கியது.

பாடசாலை நாட்கள் முதல் பல்கலைக் கழகம் வரை பட்டிமன்றம் முதல் பத்திரிகைகள் வரை அகிலாவின் சிந்தனைகள் உயிர்பெற்று பலரையும் விழிப்புறவைத்தன.

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்று ஒளவை சொன்னது தனிய ஆண்களைமட்டுமா? கைகட்டி சேவகம் செய்ய, ஆண்கள் இருந்த இரையில் எம்மை ஆட்சிசெய்ய காதல்,அன்பு பாரம்பரியம் என்கின்ற போர்வையால் எமக்கு பொன்னாடைபோற்றி நம்மையே நாம் உணராது ஒரு அடிமைவாழ்வை தருபவர்கள் இந்த ஆண்கள்."

இப்படி பல கருத்துக்களை தன் கவிதையிலும் பேச்சிலும் முழங்கிய அன்றைய அகிலாவை இருபதுவருட இடைவெளிக்குப்பின் என் 'நிலவு " சஞ்சிகைக்கு ஒரு நேர்காணலுக்காக ஜெர்மனியில் சந்திக்கின்றேன். அவள் என்னுடன் பழைய நினைவுகளைமீட்பதும் தன் அன்றாட வீட்டுவேலைகளிலும் கருத்தாகவும் நின்றாள்.

என்ன காந்தன்! என்னிடம் உள்ள திறமைகளை நீங்கள் இப்போ சொல்லும் போதுதான் எனக்கே ஞாபகம் வருகிறது என்றாள் அகிலா.. நீங்கள் இறுதியாக எழுதிய சிறுகதை ஏதும் இருந்தால் தாருங்கள் பார்க்கலாம் என்றேன்.

அவள் இதோ என்றபடி அறைக்குள் சென்று தூக்கிவந்து என் மடியிலேயே தந்துவிட்டு இது சிறுகதை அல்ல இது தான் நான் இறுதியாக எழுதிய நாவல் என்று நிருஷாவை இருத்திவிட்டாள். இளமையில் அகிலாவிற்கு இருந்த அதே உருட்டும் விழிகள்.

' முகத்தை அலசிவிட்டு வாருங்களேன். இஞ்சை என்னுடன் படித்த காந்தன் வந்திருக்கிறார். என்னை நேர்காணவாம். இரவிரவாக காட்ஸ் அடித்துப்போட்டு போதாக்குறைக்கு பட்டையும் அதுதான் பிறன்டியோ கிறண்டி அதையும் போட்டு ஏதோ இரவு வேலைக்கு போனவர்கள் மாதிரி தூங்கிவடியிறியள். இஞ்சாலை வாருங்கோவேன் என்று அழைத்தாள் தன் கணவனை அகிலா. ரவி உடம்பை முறித்துக்கொண்டு வெளியில் வருகிறார்.நேரம் மாலை 6மணி.இனி அடுத்த ஆட்டம் நண்பர்களுடன் சூதாட்டத்திற்கு செல்லவேண்டும். 'பெரிதாக காசை வைத்து விளையாடுவ தில்லைத்தான் ஆனால் அதைவிடப் பொன்னான பெரிய நேரத்தை அல்லவா வைத்து விளையாடுகிறார்கள்" என்றபடி முகம் துடைக்க துவாயைக் கொண்டு வந்து கொடுத்தாள். ஒரு கையில் தேனீரும் மறுகையில் சிகரட்டும் ஆக இருக்கும் ரவியின் முகம் கழுவி நனைந்த முடியைத் துடைத்து விடுகிறாள் அகிலா.

காந்தனின் பார்வை அன்றைய அகிலாவின் கவிதைகளை மீள அசைபோட்டது.

> **காலுக்கு சப்பாத்து நூல் கட்டி**
> **அடுக்களையில் நூலாய்**
> **இழைத்தும் –நாய்**
> **வாலுக்கும் இல்லா மதிப்புடன்**
> **படுக்கும் பாவையா? பெண்!**

நான் தேடும் அகிலாவை இன்று காணவில்லை! கவிதைகள் என்ன வெறும் எதுகைமோனைக்காக எழுதப்படும் நீர் எழுத்துக்களா? அவள் தன் மீது கணவனின் கால்கள் தவறுதலாகப் பட்டுவிடக் குனிந்து அவர் காலைத் தொட்டு வணங்கிவிட்டுச் சென்றாள்.

அது என் சிந்தனையைக் கலைக்க மீண்டும் என் பேச்சைத் தொடர்ந்தேன். பேச்சின் நடுவே ஒன்றைப் புரிந்து கொண்டேன். ரவிக்கு வேலை இல்லை என்பதும். வேலை தேடி வந்தாலும் விலகிப்போகும் மனம்படைத்தவர் அவர் என்றும் தெரிந்தது. அதையும் விட ஒன்று நன்றாகவே தெரிந்து கொண்டேன் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என அன்று சொல்பவர்களுக்கு சாட்டை அடி கொடுத்த கவிக்குயில் அகிலா, இன்று புல்லையும் கல்லையும் வணங்கும் வாழ்கைக்குள் வாழ்கிறாள் என்று.

நீங்கள் என்றாலும் எடுத்துச் சொல்லி மீண்டும் அவளை எழுத்துலகிற்குள் கொண்டுவரலாமே! இருக்கும் மேலதிக பொரு ளை மட்டுமல்ல அறிவையும் பகிர்ந்துகொள் வேண்டும் என்பதே ஆன்றோர் கருத்து.

ஓய்வு நேரங்களில் எதிர்காலச் சந்ததிகளுக்கு உகந்த பல கட்டுரைகளை எழுதி அனுப்புங்கள் உங்களுக்கு எதிர்காலம் தலைவணங்கும்.என்றேன்

ரவிக்கு குனிந்து சப்பாத்துப் போடமுடியாமல் பியர் வண்டிதடுத்தது. ஓடிவந்து நூலைக்கட்டிவிட்டாள்.அகிலா!

(இது அல்லவா உண்மைக்காதல்.) அவர் ஏதும் பேசவில்லை மாலைக்காட்ஸ் விளையாட்டிற்கு நண்பர்களின் இல்லத்தை நோக்கிப் புறப்படுகிறர்.

நான் சற்று உரத்த குரலில் கேட்கின்றேன்' சொல்லிப் போட்டுப் போங்களேன் உங்கள் மனைவியை மீண்டும் எழுதும்படி". முகத்திலே ஒரு இரப்பர் சிரிப்புடன் சொன்னார்' அவ நல்லாப் பிட்டவிப்பாள் இருந்து சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும்.". என்றார்.

எனக்கு தற்கொலை செய்யவேண்டும் போல் இருந்தது. எப்படி என்று கேட்கிறீர்களா? அந்தப் புட்டுப்பானைக்குள் ஒரு வெடிகுண்டோடு குதிக்கவேண்டும் அவ்வளவுதான்.


'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

Aadaa Finance GmbH

Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)



Eidgenössische finanzmarktaufsicht Nr.35302

Fachmann Für Versicherung & Vorsorge

Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland

aaDaa Finance 0798000100



079 8000 100 | arulnages@yahoo.com

finma : 34598 cicero : 25605



மங்கல இசைக்குழு

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்





N.K.Raguraman

Dresdener Str.6 50126 Bergheim Germany

Tel: 0049 157 89 15 95 71

0049 2271 670236 | 0049 160 91146240

# ADS BESTFOODS




**Rheinische Str 79-81 44137 Dortmund** **TEL: 0231 950 46 883**

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நின்று கொல்லும் நீரிழிவை வெற்றி கொள்வோம்

தி.மைக்கல்
(தலைவர் யாழ் நீரிழிவு கழகம் யாழ்ப்பாணம்)

## 1. நீரிழிவு பற்றிய அறிமுகம்

மனித குலத்தின் சுகவாழ்வில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் நோய்களின் அரசனான நின்று கொல்லும் நீரிழிவு நோய் கிறிஸ்துவுக்கு முன்னர் பல நூற்றாண்டுகளாய் உள்ளது. நீரிழிவை கட்டுபடுத்த உலக சுகாதார ஸ்தாபனமும் சகல அரச மற்றும் தனிப்பட்ட சுகாதார நிறுவனங்களும் மிகவும் பிரயத்தனம்படுகின்றனர் எனினும் இந்நோயாளர் களின் தொகை வருடா வருடம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. உலகில் 11% மக்களும் இலங்கையின் வடமாகாணத்தில் 18% மக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முன்பு நீரிழிவு நோயானது முதியவர்களிடமும் உடல் உழைப்புக் குறைந்த பணம் படைத்தவரிடமும் காணப்பட்டது. தற்போது சிறுவர் முதல், முதியோர் வரை பால் வேறுபாடின்றி நீரிழிவுநோய்க்கு ஆளாகின்றனர். உலக மக்களை நீரிழிவு தொடர்பாக நான்கு வகையாக வகைப்படுத்தலாம் .

- ★ நீரிழிவுபரிசோதனை மேற்கொண்டு நீரிழிவுநோய் இல்லை என உறுதிப் படுத்தப்பட்டவர்கள் இவர்கள் பாக்கியசாலிகள்.
- ★ நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு நீரிழிவு நோய்க்கு ஆளாக கூடும் என கண்டு அறியப்பட்டவர்கள்
- ★ நீரிழிவு பரிசோதனை மேற் கொண்டு நீரிழிவு நோயாளராக இனம் காணப்பட்டவர்கள்.
- ★ நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளாது தமக்கு நீரிழிவு நோயுடன் வாழ்பவர்கள் நீரிழிவு நோய் ஏற்பட்டால் பல்வேறு நோய்கள் இயல்பாக ஏற்பட கூடும்.

## 2. நீரிழிவு என்றால் என்ன?



குருதியில் குளுக்கோசின் அளவு நியம அளவிலும் பார்க்க உயர்வடைகின்ற நிலைமையே நீரிழிவாகும்.

குருதியில் குளுக்கோசின் அளவினை கூடி குறையாது சம சீராக பேன வேண்டும்.

ஒவ்வொரு மனிதனின் குருதியிலும் குறிப்பிட்டளவு குளுக்கோஸ் உடலுக்கு சக்தியை வழங்க இருத்தல் வேண்டும். குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வடைகின்ற நிலைமையே நீரிழிவு எனக் கூறப்படும்.

நீரிழிவு ஒர் குணப்படுத்த முடியாத நோயாகும். ஆனால் இதனைக் கட்டுப் படுத்த வாழ்நாள் முழுவதும் அதற்குரிய கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.

## 3. நீரிழிவு பரிசோதனைகள்

Fasting Blood Sugar FBS=70 – 100mg/dl (10 மணித்தியாலங்கள் உணவு உட்கொள்ளாமல் இருந்த பின்னர் குருதியின் குளுக்கோசின் அளவு) Post Prand ing Blood Sugar PPBS= 126mg/dl (உணவை உட்கொண்டு 2 மணித்தியாலங் களின் பின்னர் குருதியின் குளுக்கோசின் அளவு) Random Blood Sugar (RBS =140mg/dl எழுந்தமானமாக எந்த நேரமும் செய்யப்படும் பரிசோதனை. HBA1C இது ஆய்வு கூடத்தில் செய்யும் பரிசோதனையாகும். மூன்று மாதம் குருதியிலுள்ள குளுக்கோசின் சராசரி அளவைக் காட்டும் 6.4 க்குள் ,ருத்தல் வேண்டும். நீரிழிவு நிலையை அறிவதற்கு HBA1C பரிசோதனை சிறந்த முறையாகும்.

## 4. வருடாந்த பரிசோதனைகள்

நீரிழி நோயாளர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது தமது இதய,சிறுநீரக, கண், பாதம் (நரம்பு) போன்றவற்றை பரிசோதித்து அவற்றின் செயற்திறன் பற்றி அறிதல் வேண்டும்.

## 5. நீரிழிவு நோய் வகைகள்


### நீரிழிவு வகை I

★ உடலில் இன்சுலின் சுரக்கப்படாமையால் ஏற்படும் நிலையே நீரிழிவு நோய் வகை I ஆகும். வைத்தியரின் ஆலோசனைப்படி இவ் வாறான நோயாளர்கள் வாழ் நாள் முழுவதும் தினமும் இன்சுலினை ஊசிமூலம் ஏற்றுதல் வேண்டும்.

### நீரிழிவு வகை II


★ இன்சுலின் சுரப்பிலும், செயற்பாட்டிலும் தடை ஏற்படுவதாலும் பெரும்பாலும் பரம் பரையாலும், முதுமை காரணமாகவும், துரித உணவுப் பழக்கம் காரணமானமாகவும், சீனி பண்டங்கள் மற்றும் அதிக மாப்பொருட்கள் உண்பவர்களையும் உடல் பருமனான வர்களிடமும் இவ்வகை நீரிழிவு நோய் II காணப்படுகின்றது. நீரிழிவு நோயாளராக இனங்காணப் பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் வைத்தியரின் ஆலோசனைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். தவறின் பல்வேறு நோய்களுக்கு ஆளாக வேண்டி வரும்.

26 ஆம் பக்கம் பார்க்க...




# வெற்றிமணி மிகக் கவர்ச்சியாகவும் மிகக் கனதியாகவும் இருக்கிறது

பேராசிரியர். சி.மௌனகுரு (இலங்கை)



தாங்கள் அனுப்பிய வெற்றி மணி இதழ்கள் கிடைத்தன.

மட்டக்களப்பு சென்று இருந்த நான் இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் தான் திரும்பினேன்.

அதனால் பதில் தாமதம் ஆகிவிட்டது.

சிறந்த கட்டுரைகளின் உட்பொருளை இனம் கண்டு அவற்றை வெற்றி மணி யில் பதிவிடும் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

வெற்றி மணி மிகக் கவர்ச்சியாகவும் மிகக் கனதியாகவும் இருக்கிறது.

இன்றைய வாசகர்களின் மன நிலையை அறிந்து அவர்களின் நாடி பிடித்து அவர்களுக்கு விடயங்களைக் கொடுப்பதாக இருக்கிறது.

பொழுதுபோக்குடன் அறிவு ஊட்டலையும் அதில் காண்கின்றேன்.

இன்றைய தேவையும் அதுவே.

‘சுருக்கம் கவர்ச்சி’

இதுவே இன்றைய எழுத்துக்களின் தேவை என நான் கருதுகிறேன்.

பழைய அனுபவங்களையும் புதிய அனுபவங்களையும் கூறுவதோடு அதற்குள் சில கருத்துக்களையும் கூற முயல்கிறேன்.

மீண்டும் நன்றிகள்
சி. மௌனகுரு
20.08.2023

25 ஆம் பக்கத் தொடர்ச்சி... நின்று கொல்லும் நீரிழிவை...

★ குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருதடவையாவது நீரிழிவு நிலையினை HBA1C பரிசோதனை செய்து வைத்தியரிடம் காண்பித்து அவரின் சிபாரிக்கு அமைவாக மருந்துகளை பயன்படுத்த வேண்டும் நோய் நிலைமை மாற்றம் அடைவதால் ஒரு முறை பெறப்படும் மருந்தினை மாதக்கணக்கில் தொடர்ந்து பயன்படுத்தக்கூடாது.

★ நீரிழிவு நோயாளர்கள் எக்காரணம் கொண்டு மருந்துகளை கூட்டிக்குறைக்கவோ எடுப்பதை சுயமாக நிறுத்தக்கூடாது.

### கற்பகால நீரிழிவு

★ இது கற்ப காலத்தில் தற்காலிகமாய் ஏற்படுகிறது. கற்பகாலம் நிறைவுற்றதும் நீரிழிவு இல்லாம போக கூடும் சிலருக்கு இது தொடரலாம்.

### 6. நீரிழிவின் அறிகுறிகள்

★அடிக்கடி சிறுநீர் கழித்தல்
★அதிகப்படியான தாகம்
★ உடல் பலவீனம் / நிறை இழப்பு
★ அதிகப்படியான பசி
★ புண்கள் ஆறுவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும்.

### 7. நீரிழிவால் ஏற்படும் பாதிப்பு

★ மாரடைப்பு
★ பாரிச வாதம்
★ சிறுநீரக செயலிழப்பு
★ கண் பார்வையிழப்பு
★ மாறாப்புண்களால் பாதம் அகற்றப்படும் நிலை ஏற்படலாம்



★ கட்டுப்பாடற்ற நீரிழிவினால் உடல் உறுப்புக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன.

### 8. குருதியில் குளுக்கோசின் அளவு கூடினால் ஏற்படும் பாதிப்புக்களாவன.

★ பார்வை மங்கும்
★ வயிற்றுப் பிரட்டல்.
★ அதிக தாகம்
★ அடிக்கடி சிறுநீர் கழித்தல்
★ சோம்பலத் தன்மை
★ அதிகபசி / களைப்பு

### 9.நீரிழிவை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

★ அளவான ஆரோக்கியமான ஊட்டச்சத்து நிறைந்த உணவை உட்கொள்ளுதல் வேண்டும்.

★ சோறு, மா பண்டங்களை அளவாக உண்ணுதல் வேண்டும்.

★ சீனி, சீனி கலந்த பானங்கள் (சோடா, ஐஸ்கிறீம் வகைகள்) மற்றும் சீனிப் பண்டங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

★ தினமும் 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். (வேக நடையே சிறந்த உடற்பயிற்சியாகும்)

★ மன அழுத்தமற்று வாழுதல் வேண்டும் இதற்கு தியானம், யோகா பயிற்சிகள் சிறந்தது.

★ வாழ்நாள் முழுவதும் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை கிரமமாக உட்கொள்ளுதல் வேண்டும்.

★ குருதியில் குளுக்கோசின் அளவை கிரமமாக பரிசோதித்தல் வேண்டும். (HBA1C பரிசோதனை மூன்று மாதத்திற்கு ஒரு தடவை செய்வது சிறந்தது)

### 10. உடற்பயிற்சியால் ஏற்படும் நன்மைகள்

★ உடல் நிறை அதிகரிப்பு குறையும்.
★ இரத்த அழுத்தம் குறைந்திடும்.
★ சீரான உடல் அமைப்பு ஏற்பட்டு உடல் அழகு அதிகரிக்கும்
★ குருதியில் குளுக்கோசு மற்றும் கொழுப்பின் அளவு குறையும்
★ உற்சாகம் ஏற்படும்.

### 11.உணவு முறை

★ சாதாரண ஒருவருக்கு 1500 முதல் 2000 கலோரிவரை ஒருநாள் செயற்பாடுகளுக்கு தேவையாக உள்ளது. இதனை பெற்றுக்கொள்ள காலையிலும் இரவிலும் ஜந்து இடியப்பம், மூன்றுபுட்டு, நான்கு தோசை இவற்றில் ஏதாவது ஒன்றை அதிக மரகறிவகையுடன் உண்ணுதல் வேண்டும்.

★ மதிய உணவாக ஒன்றரை கப் சோற்றுடன் அதின் அளவுக்கு அதிகமான மரகறிவகைகள் மற்றும் தீப்பெட்டி அளவு மீன் அல்லது மாமிசத்துடன் சேத்து உண்ணுதல் வேண்டும்

★ உண்ணும் மாப்பொருள்களினால் கிடைக்க பெறும் சக்தியை பயன்படுத்த கூடியதாய் உடல் உழைப்புகள் ,இருத்தல் வேண்டும். தவறின் மேலதிக குழுக்கோசு கொழுப்பாக மாற்றமடைந்து குருதிக்கலன்களை அடைக்கக்கூடும்.

★ அதிக சீனி அற்ற பழங்களை உண்ணுதல் வேண்டும். (நாவற்பழம், கொய்யாப்பழம், பப்பாசி பழம், நெல்லிக்காய், விழாம்பழம் சிறந்தவை)

★நாம் ஒவ்வொரு வேளைகளிலும் உண்ணும் உணவு சகல ஊட்டச்சத்துக்களையும் உள்ளடக்கப்பட்ட நிறை உணவாக இருத்தல் வேண்டும் இவ்வகையான உணவுகள் நோய் எதிர்ப்புசக்தியைக் கூட்டும்.

★ காலை உணவு 7.00 மணிக்கும் மதிய உணவு 1.00 மணிக்கும் இரவு உணவு 7.00 மணிக்கும் உன்னுதல் சிறந்ததாகும்.

### 12.மன அழுத்தம்

★ மன அழுத்தமே சகல நோய்களுக்கும் காரணமாகின்றது.

★ ஆசையை விட்டால் ஆனந்தம் உண்டு.

★ எமது பேராசையே மன அழுத்தத்திற்கு காரணமாக அமைகின்றது எம்மை மற்றவர்களிடம் ஒப்பிட்டு பார்ப்பதை தவிர்த்தல் வேண்டும். தினமும் தியானம் செய்வதாலும், யோகா பயிற்சி ஈடுபடுவதாலும் மற்றும் சுவாசப்பயிற்சியிலும்,இறைவழிபாட்டிலும் சந்தோசமாக சகலருடனும் கதைத்து மகிழ்வதாலும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம்.


வெற்றிமணி வெளியீடு 28

“வைகல்” நூல் வெளியீட்டு விழா!

24.09.2023 ஞாயிற்றுக்கிழமை

அன்பிற்கினிய உறவுகளே!

வருகின்ற புரட்டாதி மாதம் 24 ஆம் திகதி (24.09.2023) என்னுடைய எழுத்தில் “வைகல்” எனும் வாழ்க்கை வழிகாட்டி நூல் வெற்றிமணியின் 28வது வெளியீடாக வெளிவர இருப்பதனை மகிழ்வோடு அறியத்தருகின்றேன். சமூக அக்கறையோடு வாழ்வில் அன்றாடம் மிகமிகத் தேவைப்படுகின்ற அரிய விடயங்களை உள்ளடக்கிய பயன்தரு நூலாக அமைத்து இதனை எல்லோருடனும் பகிர்வதில் உளம் நிறைவடைகின்றேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிற்கவும், நேசத்தோடு கலந்துரையாடவும் அனைவரையும் உள்ளன்போடு அழைக்கின்றேன். இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வை சிறப்பிற்கும் வண்ணம் வரவேற்று அனைவருடனும் உரையாடக் காத்திருக்கின்றேன்!



அன்புடன் கிரிணி

நேரம்: மாலை. 4.00 மணி
நிகழ்வு இடம்பெறும் இடம்:
தமிழர் அரங்கம் (டோட்மூண்ட்)
Rheinische Straße 76-80 | 44137 Dortmund





அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
வெற்றிமணி- ஜெர்மனி

# வெற்றிமணி இலங்கைச் சிறப்பிதழ் கண்டு விரல்களில் பட்டுத்தெறித்த கவிதை!

வெற்றிமணி நாதம் ஜேர்மனியில் ஒலிக்க
முத்தமிழுமாய செய்திகளை கோர்த்தடுக்கி
அச்சுருவில் நம் தமிழை அழகு செய்து சுமந்து
பன்நாடெங்கும் பவனி வருகிறது காண் – இனிதே

உற்ற பல செய்திகளை தேடித்தன் பக்கமதில்
இட்டழகு கோலமுடன் வீடு வந்தது நேற்று
தொட்டதனை பார்க்க தோன்றியதே மகிழ்ச்சி
அற்புதமாம் அழகு பத்திரிகையின் கனதி

ஆனி மாத இதழ் அலங்கார தோரணையில்
இலங்கை தமிழ் மண்ணை இனிதாக நேசித்து
பற்பலவும் நற்சுவையும் பல மடங்கு புதினங்களும்
தன்னியல்பு போல தனித்து வந்து காட்டியது

வெற்றிமணி ஏன் இத்தனை அழகு என
சுற்றிலும் எண்ணிப்பார்த்தேன் – வியந்து
ஓவியக் கலைவேள் என்ப, பிரதம ஆசான் என்று
தெரிந்ததும் புரிந்தேன் அதனால் தான் அழகு என்று

சுட்டெரிக்கும் வெயிலில் சுட்டுத்தள்ளிய படமும்
கட்டமைப்புக்குள் பெண்கள் மலையகம் பற்றிப் பேச



வாழ்க்கையை பட்டம் என்று சொல்வதை விடுத்து
செவ்வகம் போட்டுச் சொன்ன செம்மையும்
யாழ்ப்பாண கதலி பற்றி சிறப்பாக எழுதி வைத்த
பார்த்தீபன் எழுத்து வரலாறு கதையின் சிறப்பு
சாப்பாடு என்றால் நல்ல சரியான யாழ் மண் என்ற
நோக்கோடு எழுதித் தீர்த்த சிறப்புக்கள் போற்றி போற்றி

திவ்வியா சுஜன் எனும் கலாசூரி நடனமங்கை
பாரதி பற்றி தொடராய் பல பக்கம் எழுதித்தள்ளும்
இருபத்தி ஏழாம் பகுதி அதுபற்றி படித்தேன் மகிழ்வாய்

எழில் கொஞ்சிம் இலங்காபுரி பற்றி சிறப்பு
விதவைகள் தினத்தையொட்டி ஆகாயம் இல்லா
நிலவை அழகாக சொன்னார் ரஞ்சினியம்மா
வாழ்நாள் நூலகமாய் வாசிப்பின் மேன்மை பற்றி
திக்குவல்லை மண் கமால் செம்மையாய் தந்துள்ளார்
மனதை மயக்கும் பாசிக்கூடா கடலும் கரையும்
இலக்கியத்தில் இவர்கள் தொடர் முப்பத்தொரு நான்கு
தல்லாயிருக்க வேண்டிய நாசமானதெப்பிடி
இந்திர விழாவிம் வல்வெட்டித் துறையுமென்பதுவும்

எழுதாத கவிதைக்கு முதல் பரிசு படமும்
சாநிழல் நூலும் வெளியீடும் – திருப்பிய போதில்
நமைப் பிரிந்த லண்டன் விமல் அவர்களை
கண்டு மனம் நொந்தோம் கனத்து

இருபதொடு ஒன்பதாம் ஆண்டு நிறைவு
விரைவுடனும் வீறுடனும் நிமிர்ந்துலவும் வெற்றிமணி
நெடுங்காலம் வாழ வேண்டும் நின்றுலகில்
சீரோங்கி தமிழ் நாதமாய் வென்று மணி ஒலிக்கட்டும்

**ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன் (இயக்குநர)**
**தேஜஸ்வராலயா கலைக்கூடம் இலங்கை**



சத்தமின்றி சில கதைகளைச் சொல்லிச்செல்லுவதற்கு ஒளிப்படங்கள் ஆற்றுகிற பங்களிப்பு அளப்பரியது. “வடக்கில் என் நிலம்” என்கிற தொனிப் பொருளில் நான் தேடியடைந்த ஒரு ஒளிப்படத்தையும் கீழுள்ள கவிதையையும் வெற்றிமணியின் ஆவணி இதழில் பிரசுரித்திருக்கிறார்கள். அத்தோடு ஜேர்மனியில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கிற வெற்றிமணியின் இலங்கை சிறப்பிதழையும் கரம் சேர்த்திருக்கிறார்கள்.

**சர்மிலா விநோதினி இலங்கை.**

## இலங்கைச் சிறப்பிதழ் இறக்கை விரிக்கிறது

இலங்கைச் சிறப்பிதழாக வெளிவந்துள்ள ஆனிமாத வெற்றிமணி, வண்ணமயமான சஞ்சிகையாக மட்டுமல்லாமல் பல காத்திரமான விடயங்களையும் தாங்கி வந்துள்ளது. அரசியல், இலக்கியம்,விவசாயம், விஞ்ஞானம், சமூக நலன், விழாக்கள் என பரந்துபட்ட தளங்களில் ஆக்கங்கள் அமைந்துள்ளன. வெற்றிமணி தயாரிப்பில் “எழுதாத கவிதைக்கு முதல் பரிசு“ குறும்படம் பற்றிய அறிவிப்பு ஆர்வத்தைத் தூண்டும் சிறப்பான முன்னோட்டம். அனைத்துமே சிறப்பாக இருப்பினும் விவசாயப் பேராசிரியர் ஆசி.கந்தராஜாவின் “சீட்லெஸ் மாம்பழங்கள் சாத்தியமா ?




ரஞ்ஜனி சுப்ரமணியம்
(இலங்கை)

‘ பிரியா இராமநாதனின் ‘நல்லாயிருக்க வேண்டிய நாடு நாசமாய் போனதெப்படி?‘ ,திக்குவல்லை கமாலின் ‘வீடு ஒரு வாழ்நாள் நூலகம்‘, இன்றைய ’கூகுள் பெட்டையை‘ விட அம்சமாக 1965 இல் நவிகேஷன் கூறிய ‘மாதவி‘ ரசனை மிகுந்தவர். சைக்கிள் வளையம் உருட்டும் வாத்தியாரின் பேரன் பத்து சதத்து தோடம்பழ இனிப்பின் சுவை. Dr.T.கோபிசங்கரின் வடக்கின் மண்வாசனை மிகும் ‘வாழ்க்கை ஒரு செவ்வகம்‘ ஆகிய கட்டுரைகள் மனம் கவர்ந்த வாசிப்பு அனுபவத் தைத் தந்தன.

வெற்றிமணிக்கு நல்வாழ்த்துகள்.

## மலையகத்தில் வெற்றிமணி ஒலிப்பது மகிழ்ச்சியைத் தருகிறது



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
(இலங்கை)

## இன்று மலையகத்தின் உயிர்நாடிகளின் கைகளில் ஒலித்த வெற்றிமணி

வெற்றிமணி யின் இலங்கைச் சிறப்பிதழ் இலங்கையின் உயிர் நாடிகளின் கைகளில். நாவலப்பிட்டியில் 1950 இல் வெற்றிமணி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைச் சிறப்பிதழ் படைப்பாளிகள் முதல் சாதாரண மக்கள் வரை மலரச் செய்த, சிவகுருநாதன், சக்திவேல், யோ.சாந்தி, றோஷான். சாமுவேல், யாவருக்கும் நன்றி.



## புதுக்குடியிருப்பில் வெற்றிமணி

செல்வி.நிலா (Development officer அபிவிருத்தி உத்தியோகத்தர் (DO) புதுக்குடியிருப்பு/ கோம்பாவில்) அவர்கள் கரங்களில் வெற்றிமணி. இலங்கைச் சிறப்பிதழ் புதுக்குடியிருப்பில் வெற்றிமணி 2022 இல் இடம் பெற்ற பொருளாதார நெருக்கடி காலத்தில் மக்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கவும், உருத்திரபுரம் மக்களுக்கு குடிநீர் கிணறு அமைக்கவும் சிறப்பாக ஏற்பாடுகள் செய்து உதவிய சமூகசேவையாளர். நிலாவின் சேவைகள் இன்றும் தொடர்ந்தவண்ணம் உள்ளது.



18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நெடுஞ்சுடர்

கொண்டிருந் தார்கள். ‘ஷெல்‘ அடி ஓரளவு குறைந்த பின்னர் நாங்கள் வெளியே வந்து ‘உங்களொருவருக்கும் பயமேயில்லையா?‘ கேட்டோம். அதற்கு பரதன் ‘அம்மாவுக்குப் பக்கத்தில் இருக்கிறவரை எங்களுக்கு எந்தப்பயமும் இல்லை‘ என்றான் புன்னகையோடு.

‘ஏன்டா? ஷெல் இங்கை வந்து விழுந்தால் என்னாகும் சொல்லுபாப்பம்?‘ அதற்கும் அவன் சிரித்தவாறே ‘அதெல்லாம் அம்மாவை விட்டு வெகுதூரத்தில் இருக்கும் போதுதான். அம்மாவுக்குப் பக்கத்திலை இருந்தால் ஒண்டும் கிட்ட வராது. அம்மா செய்யிற புண்ணியங்கள் எங்களைக் காத்திடும்‘ என்றான். அவன் சொன்ன அந்த வார்த்தைகள் எத்தனை உண்மையானவை‘ அதைப் பல சந்தர்ப்பங்களில் யோசித்திருக்கிறேன்.‘


**-சந்திரா இரவிந்திரன் (மகள்)**

‘எனக்கு நினைவு தெரிந்து நான் அப்பம்மாவைப் பார்த்ததும் பழகியதுமான முதல் ஞாபகம் 1989இல் பரதன் சித்தப்பா மாவீரனாக மரணித்த சில நாட்களுக்குப் பிறகே... அப்பொழுது எனக்கு ஐந்து வயது.

இந்திய இராணுவத்தினது கண்களுக்குள் விரல்களை விட்டு ஆட்டிக் கொண்டிருந்த ஹீரோ மொறிஸ் அவர்களுடைய வீரச்சாவு அது! என்னுடைய பரதன்சித்தப்பாவின் வீரமரணம் அது!

நாங்கள் அச்சமயம் வற்றாப் பளையில் இருந்தோம். மரணச் சடங்கிற்கு உடனே போக முடியாதளவு கெடுபிடிகள். ஊரடங்குச் சட்டம். ஓரிரு நாட்கள் கழித்துத்தான் அப்பாவும் நானும் பருத்தித்துறைக்கு பஸ்ஸில் போனோம். பருத்தித்துறை பஸ்ஸ்ராண்டக்கு அப்பாவின் பல நண்பர்கள் வந்தார்கள். ‘உங்கடை வீட்டுப்பக்கம் போகேலாது. திருநாவுக்கரசு மாஸ்ரர் வீட்டிலை தான் எல்லாரும் நிக்கினம். சத்தம் போடக் கூடாது. சத்தமாய் அழக்கூடாது.

அப்பா கேட்டார்: ‘டீழனல குடுத்தவங்களோ? ஆர் போய் எடுத்தது..?‘ ‘அம்மா தான் போய் எடுத்தவ..‘ அப்பா உடனேயே கத்தியழத் தொடங்கி விட்டார் ‘ஊஸ்... மெதுவா! அழாதையுங்கோ..!‘ அப்பாவின் நண்பர்கள் அப்பாவின் அழுகையைக் கட்டுப்படுத்-தி, எங்களை ஊருக்குள் கூட்டிக் கொண்டு போனார்கள். ஒரு சிறிய இரும்புக்கேற்றைத் திறந்து உள்ளே போனோம். யாரோ உள்ளிருந்து ரோர்ச் அடித்து, ‘யாரது..?‘ என்றார்கள். ‘நான் ராஜன். உள்ளை வரலாமோ..?‘ என்றார் அப்பா. அடுத்தகணமே அப்பம்மா அழுதபடி ஓடி வந்தா. அவதான் என் அப்பம்மாவாக இருக்குமென்று எனக்கு உடனேயே விளங்கி விட்டது. அப்பம்மா கொஞ்ச நேரம் அப்பாவைத் தன்னுடைய நெஞ்சில் சாய்த்து வைத்து நிறையச் சொல்லிக் கொண்டிருந்தா. அவவின் இருகண்களும் கண்ணீரால் நிரம்பியிருந்தன. ‘நீ கவனம் ராஜன்! உன்ரை பிள்ளையள் கவனம்! நீயேன் இவ்வளவு தூரம்வந்தனி? அதுவும்உவனையும் கூட்டிக்கொண்டு?‘



நான் அவவைப் பார்த்துச் சிரித்தேன். அந்தக்கவலை நிறைந்த தருணத்திலும் அவ என்னைப் பார்த்துச் சிரித்தா. ‘என்னப்பு?‘ என்று கேட்டா. வார்த்தைக்கு வார்த்தை ‘அப்பு...அப்பு...‘ என்று பரிவோடு அழைத்தா. என்னை அள்ளி அணைத்துத் தூக்கினா. முத்தம் கொடுத்தா. ‘அட... உன்ரை அப்பன் அழுறான் எண்டு யோசிச்சதிலை உன்னை நான் யோசிக்கேல்லை...‘ என்றா. அவவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது.‘

-ஜனகன்.பிரேமராஜன் (பேரன்)

வாசிக்கும் போது வெற்றிமணியில் தாயின் முகத்தைப் பார் த்து, பார்த்து, வாசிக்க வைக்கிறதா. அப்படி வாசித்தால் உங்கள் தாயும் உங்களோடு இருப்பதாகவே எண்ணிக் கொள்ளுங்கள். ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஏனிந்த மரதனோட்டம்?

இவ்வாறு வேதனையான இழப்புக்களும் அதற்கான மரணச் சடங்குகளும் இப்பூமிப்பந்திலே நடக்கும். நடந்தவற்றைச் சில காலங்களில் நாம் மறந்துதான் போவோம். தொடர்ந்து உலகத் தடம் பதிக்க முயற்சிப்போம்.

எழுத்தாளனாய், பாடகனாய், நடிகனாய், அரசியல்வாதியாய், ஆன்மீகவாதியாய், விஞ்ஞானியாய் என்று பல வடிவங்கள் எடுக்க தூக்கமில்லாமல் உழைப்போம். ஆயினும் உருளும் பூமி உதிர்த்துவிட்டுப் போகின்ற விலைமதிப்பற்ற உயிர்களில் ஒருநாள் நாமும் ஒருவராக இருப்போம். இது யாராலும் மறுக்க முடியாத சத்தியம். ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இன்று ஒவ்வொரு ஐந்து....

அணுகும்போது கூட அவரவர் தங்களின் எழுத்து ஆளுமையையும், அறிவாளுமையையும் நிலை நிறுத்திக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி அந்த பிரச்சனையின் உண்மையான சாரத்தை நீர்த்துப் போகச் செய்துவிடுவது வருத்தத்திற்குரியது. இங்கே ஒரு தரப்பை மட்டும் குறை கூறுவதும் நியாயம் இல்லைதான். எழுத்தாளர்களுக்கும், செல்வாக்காளர்களுக்கும் இருக்கும் அதே சமூகப் பொறுப்பு அவர்களை பின் தொடர்பவர்களுக்கும் இருக்கிறது. அவர்கள் பின்தொடர்பவர்கள் எவ்வளவு ஆளுமை வாய்ந்தவர்களாக இருந்தாலும் ஒவ்வொரு விஷயங்களிலும் அவர்கள் முன் வைக்கும் கருத்தைப் பகிர்வதற்கு முன் அதன் நம்பகத்தன்மையையும், உண்மைத் தன்மையையும் கண்டறிந்து சிந்திக்க வேண்டும்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு“ ■

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காய்ச்சல்....

இருந்தாலும் அதைக் கூட வாங்க போறாக்கள் கொஞ்சப்பேர் தான், மற்றவை எல்லாம் வீட்டு வைத்தியம் தான்.

காய்ச்சல் மாறி, குளிச்சு, தோஞ்சு, இறைச்சி சாப்பிட்டு கடைசீல, “ please excuse my absence as ஐ was suffering from fever” எண்ட கடிதத்தோட பள்ளிக்கூடம் போக வாற கிழமை term test எண்டு சொல்ல இப்ப exam காய்ச்சல் தொடங்கிச்சுது. இவ்வளவு நாளும் இருந்து கொண்டு வேலை வாங்கின என்னை மேசையில இருத்தி வைச்சு வாங்கிச்சினம் எல்லாரும். திடீரெண்டு calling bell அடிக்கிற சத்தம் கேட்டு அட பள்ளிக்கூடம் போக alarm அடிக்குது எண்டு எழும்பிப் போய் பாத்தா Uber காரன் நிண்டான். கனவு போய் காய்ச்சல் மட்டும் நிண்டிச்சுது. ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இன்றைக்கு என்ன சமையல்?.....

வரையில் தன்னுடைய கணவர் அழுத்தி இருப்பதாகவும் , சமையலில் குறையிருந்தால் பளீரென தன்னுடைய கன்னத்தில் அறை விழுவதாகவும் கூறியிருக்கிறார் எனக்கு தெரிந்த ஓர் பாட்டி . தற்போது இப்படியெல்லாம் இல்லை என்றாலும்கூட உப்பில்லை , உறைப்பு கூட , என முகத்தை சுளித்துக்கொண்டு , சுளீரென மனதை ரணப்படுத்தும் ஆண்கள் குறைந்தபாடில்லை.( சமையலில் குறைகளை சொல்வது அல்ல பிரச்சினை அதை அவர்கள் சொல்லும் முறைதான் பிரச்சினை) எந்த பெண்ணும் சமைப்பதை குறையாக கருதுவதில்லை ஆனால், அதையே தொடர்ந்தும் செய்துகொண்டிருக்கும்போது ஒருவித அலுப்புத் தட்டுவது இயல்பே. ஹோட்டலில் உணவருந்த அழைத்து போகும்படி அடிக்கடி பெண்கள் கணவரை நச்சரிப்பதாக முன்பெல்லாம் இந்திய நகைச்சுவைகளை அடிக்கடி நான் வாசித்திருக்கிறேன் . ஆனால் , இதன் பின்னணியில் இருக்கும் உண்மை என்ன தெரியுமா?

தினமும் சமைத்து அலுத்துப்போகும் அவர்கள் எப்போதாவது அதிலிருந்து விடுதலை கிடைத்தால் போதும் என்கிற எண்ணத்திலேயே இப்படி நச்சரித்திருக்கக்கூடும் . சமைப்பது ஒரு பெரிய வேலையா?

என்பவர்களுக்கு தெரியாது அதன் பின்னாலிருக்கும்வேலை பளுவும், தனிமனித சுதந்திர இன்மையும். இந்திய இலங்கை போன்ற நாடுகளில் தான் சமைப்பதற்கென அதிகம் நேரத் தினை எடுத்துக்கொள்கிறோம் என நினைக்கிறேன் . நிச்சயம் இவற்றுக்கு மாற்றுத்தீர்வுகளை நாம் கண்டறிவது காலத்தின் கட்டாயம். இன்னுமே சோற்றுக்கு சுற்றிவர நான்கைந்து கறிவகைகள் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது , ஒரு சப்பாத்திக்கு தொட்டுக்கொள்ள இரண்டு சைடு டிஸ்களாவது வேண்டும் என நினைப்பது , பகல் வைத்த குழம்பை இரவு தொடவே மாட்டேன் என அடம் பிடிப்பது போன்றவற்றை ஆண்கள் நிறுத்திக்கொண்டாலே பெண்களின் பாதி சமையல் பளு குறைந்துவிடும் . கணவர் , குழந்தைகள் என அவரவர் வேலைகளை அடுத்தவர்களை எதிர்பார்க்காமல் செய்யப்பழக்குவது பெண்களது தலையாய கடமைகளில் ஒன்று. மாற்றங்கள் நம்மிடமிருந்து தொடங்கட்டும். ■








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# சிலப்பதிகாரத்தில் புனைவு நெருடல்

இலக்கிய வரலாறாகட்டும், இன வழித்தோன்றல் தொடர்நிலை வரலாறாகட்டும் எழுதியவர்கள் புனைவு இன்றியும்,பூசி மெழுகுதல் இன்றியும் எதையும் தவிர்க்காமல் எழுதியிருப்பார்கள் என்ற வாசிப்போரின் பெருநம்பிக்கையைக் கேடயமாகப் பாவித்து எழுதுவோர் தமக்குச் சார்பாக வரலாறுகளை தாம் விரும்பியபடி எழுதுகிறார்களோ என்பது பொதுவெளிக் கதைத்தலில் ஆங்காங்கே கதைக்கப்பட்டு வருகின்றது. வரலாறுகள் எதுவாகினும் அந்த வரலாறுகளைப் படிப்போரின் மனதில் பல விடை தெரியாத கேள்விகளும் சந்தேகங்களும் எழுவது இயல்பானதே. தீர்ப்புச் சொன்ன வழக்குகளே மீண்டும் விசாரிக்கப்பட்ட சம்பவங்கள் நிறைய உண்டு.பாண்டிய மன்னனால் தீர்ப்புச் சொல்லப்பட்ட வழக்கு மீண்டும் கண்ணகியால் தோண்டி எடுக்கப்பட்டு பாண்டியன் நீதியால் தண்டிக்கப்பாட்டான் என்ற வரலாறு சிலப்பதிகாரத்தில் உண்டு. அதே வரலாற்றில் நெருடலும் உண்டு .ஆய்தல்,துணிதல்,எழுதுதல் என்பது நேர்மையின் மேன்மை வெளிப்பாடாகவே கருதப்படுகிகின்றன.

காப்பியங்கள், காவியங்கள், புராண இதிகாசங்களில் ஏராளமான புனைவுகளும் மூடிமறைக்கப்பட்ட விடயங்கள் இருப்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான வருடங்களாக நம்பப்பட்டவை மீதே கேள்விகள் எழும். இது உண்மையா? இது சாத்தியமா? எனக் கேள்விகள் எழுந்து ஒன்றுடன் ஒன்று ஒப்பீடு செய்து பார்க்கப்புடுகின்றன. ஒப்பீடுகள் ஆய்வுகளாக பரிணாம வளர்ச்சியடையும் போது, அது நோக்கிய கேள்வி எழும் போது வரலாற்று ஆய்வாளர்களும், அதைப் பின்பற்றி, அது சமுதாயத்துக்குள் பரவி அந்த வரலாறுகளில் சில தவறுகளிருக்கின்றன என்று அறீவுஜீவிகள் சிந்தித்து கேள்வி எழும் போது, வரலாறுகளில் எங்குமே தவறு நிகழவில்லை, சாத்தியமானவற்றைத்தான, உண்மையைத்தான் வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள் என



ஏலையா
க.முருகதாசன்
(யேர்மனி)

பல அறிஞர்களே சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகின்றது. ஆனால் வரலாற்று நூல்களில் பக்கசார்பாக, மூடிமறைத்து எழுதப்பட்டவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பொய் புனைவுகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் வரும் எந்த நிகழ்வையுமே யாருமே மறுத்துச் சொல்லத் தயாராகவில்லை. சிலப்பதிகாரச் சம்பவங்களை குறை சொல்வதா என்று பரவலான எண்ணம் அனைவரின் மனதிலும் ஆழப் பதிந்து விட்டது. நூல்களாகவும்,உரைகளாகவும், பட்டிமன்றவிவாதமாகவும்,கல்லூரிகளிலும்,பல்கலைக்கழகங்களிலும் பாடநூலாகவும், முனைவர் பட்டத்தின் ஆய்வுக் கட்டுரைக்கான விடயமாகவும், எல்லோராலும் நம்பப்படுகின்றன ஒரு இலக்கியத்தின் மீது கேள்வி வைக்கலாமா என்ற கேள்விக்கு, எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற திருக்குறளின்படியும், அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று நம்பாதெ ஏன?எதற்கு?எப்போது? ஏன்று கேள்விகளைக் கேள் என்று சொன்ன கிரேக்கத்தின் தத்துவஞானி சாக்கிரட்டீஸைப் பின்பற்றியும் சந்தேகங்களை கேள்விகளாக்கி விடை காண முயற்சித்தல் அறிவின் அவாவாகவும்,அகன்று விரிந்து செல்கின்றன அறிவுஜீவத்தனமாகவும் கருதப்படுகின்றது.



சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவியிடம் ஏன் போனான் என்பதற்கு ”கோவலன் நிறைகளும் குறைகளும் உள்ள தலைவன்,பரத்தையர் வீதிகளில் எப்பெபாழுதம் திரிபவன் என்று இளங்கோவடிகளும் எழுதியதாக இநூலை ஆய்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதுவே, அதுசார்ந்து பேசுபவர்களினால் மக்களின் மனங்களில் பதியப்பட்டும் இருக்கின்றது.

கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்வதற்கு முன்னரே பரத்தையர் தெருவெங்கும் அலைந்த ■

30 ஆம் பக்கம் பார்க்க...



29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சிலப்பதிகாரத்தில் புனைவு நெருடல்...



பரத்தையரிடம் உடல் சுகம் கண்டவனாயின்,கண்ணகியின் பெற்றோரர் அதனை அறியாதவர்களாகவா இருந்திருப்பார்கள்.

தனது மகளுக்கு ஏற்ற ஒரு மணமகனைத் தேடும் போது கோவலன் பற்றி தீர விசாரிக்கமலா இருந்திருப்பார்கள் என எண்ணத் தோன்றுகின்றது.என்னதான் கோவலன் பெரும் வணிகச் செல்வந்த னாக இருந்த போதும் தமது மகளுக்கு சரியான மாசுமறுவற்ற மணமகனைத் தேடியபின் அவனைப் பற்றித் துருவித் துருவி ஆராயமலா விட்டிருப்பார்கள்.

2010 ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டுக்கு யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு பெண் விரிவுரையாளர் அம்மாநாட்டுக்கு அனுப்பிய ஆய்வுக் கட்டுரை வீரகேசரிப் பத்திரிகையின் மின் பதிப்பில் வந்த போது அதில் “கண்ணகிக்கு தாம்பத்திய உறவில் இருந்த விருப்பமின்மையே, கோவலனை மதாவியை நோக்கிச் செல்ல வைத்தது என்றிருந்தது. அதை வாசித்த போது இதுவரைகாலமும் கோவலன் கணணகியின் கதைபற்றி இருந்த எனது பார்வை உற்று நோக்குதலுக்கு உள்ளானது.

கோவலனுக்குக் கண்ணகியுடனான தாம்பத்திய உறவில் திருப்தி ஏற்படாததாலோ அல்லது கண்ணகிக்கு தாம்பத்திய உறவில் விருப்பமின்மை காரணமாகவோ



அவர்களுக்குள் உடலுறவு ஏற்படவில்லை அதனால் கோவலன் கண்ணகி மீது விருப்பமற்றவனாகக்கூட இருந்திருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

அதே வேளை ஒரு ஆணும் பெண்ணும் காதல் வசப்படுவது என்பதுகூட அவை மனம் சார்ந்தது மட்டுமல்ல உடலுணர்வும் சார்ந்தது என்பதே யதார்த்தமானது.காதல் என்பது காமமும் கலந்ததுதான்.காதலனும் காதலியும் ஒருவரின் உடல் மீது ஒருவர் ஆசை வைப்பதன் மூலமே காதல் உருவாகின்றது என்ற யதார்த்தத்தை மறுக்க முடியாது.

உடலிருந்தால்தான் அதில் மனம் என்று சொல்லிக் கொள்கின்ற உருவமற்ற ஒரு உணர்வும் இருக்கும் என்பதே உண்மையாகும்.இக்கதையில் இன்னொரு விடயமாக கோவலனுக்குக் கண்ணகியைத் திருமணம் செய்து வைக்கின்ற போது பதிமூன்று வயது என மின்தமிழ்ச் செய்தியில் வாசித்திருந்தேன். பின்னர் இது தொடர்பான மின்தமிழ் ஊடான கருத்தாடலின் போது கண்ணகி திருமணம் செய்த போது அவளுக்கு பன்னிரண்டு வயது என்றிருந்தது. கோவலனும் கண்ணகியும் காதலித்துத்தான் திருமணம் செய்து கொண்டார்கள் என்று சிலப்பதிகார நூலை ஆய்ந்தோர் சொல்லுகிற போது,காதலிப்பதற்கான பூரணத்துவமான பாலியல் ஈர்ப்பு பன்னிரண்டு வயதில் ஏற்படுமா என்பது கேள்வியாகின்றது.

பன்னிரண்டு வயது என்பது ஒரு பருவ மங்கைக்கு உரிய வயது அல்ல.அது ஒரு சிறுமிக்கு உரிய வயதேயாகும்.

இற்றைக்கு நாறப்து வருடங்களுக்கு முன்புவரை பருவமடைதல் வயது பதினைந்திலிருந்து பதினாறு வயது வரையும் அப்பாலும் இருந்திருக்கிறது.இவ்வயதை பெண்பிள்ளைகள் எட்டுவதற்கு முன்னர் அவர்களின் உடலும் பாலியல் உறுப்பும் அவர்ளின் மார்பகம் போன்றவையும் துரிதமாக வளரத் தொடங்குகின்றது.

அவ்வளர்ச்சியின் முகிழ்ப்பாக பருவமடைதல் நடைபெற்றுப் பின்னரான காலங்களில் தனது இணையுடன் அனுபவிக்கப் போகும் உடலுறவு எத்தையது என்பதையும் உடலுறவு என்:றால் என்ன,அதன் பெறுபேறான இன்பம் என்ன என்பதையும் தன்னறிதல் மூலமம் தோழிகள் மூலமும் இயல்பாக பழகும் தனது பெண் உறவினர்கள் மூலமும் அறிந்து கொள்கிறாள்.

கண்ணகியின் திருமணத்தில் ஒரு கேள்வி தெக்கி நிற்கின்றது.ஒரு பருவமடையாத சிறுமியான கண்ணகிக்கு, கணணகியின் பெற்றோர் செல்வந்த வணிகனான கோவலனை தமது மருமகனாக்க வேண்டுமென்பதற்காக திருமணம் செய்து கொடுத்தார்களா என்பதேயாகும். அதுவல்லாது சிறுமியான கண்ணகி ஏதோ ஒரு நிலையில் பருவமடைந்திருந்தாலும் அவளுக்கு பருவமங்கைகளுக்கு இயலபாக ஏற்படும் பருவக் கிளர்ச்சிக்கு அவளுக்கு ஏற்படுவதறகான உடலியல்பு இருந் திருக்காது என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.கண்ணகியின் பெற்றோர் தவறுவிட்டுள்ளார்கள் என்ப தாகக்கூட எடுத்துக் கொள்ளலாம்.

அரிதாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் பன்ளனிரண்டு பதின்மூன்று வயதுப் பெண்களின் திருமணத்தின் மூலமாகவும் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்களே என்ற வாதம் முன்வைக்



கப்படுகின்றது என்று வைத்துக் கொண்டாலும்,பிள்ளைகளைப் பெறுதல் உடலுறவுச் சுகத்தினையும் கலந்த னுபவித்துத்தான் பெற்றதாக கருதிவிட முடியாது. தாம் திருமணத்திற்கு கட்டுப்பட்டவர்கள், தமக்குத் தாலி கட்டியவனின் சொல்லுக்கு கீழ்படிந்து அடங்கிப் போகுதல் என்பதற்கமைய தனது கணவனின் விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றுவதே பெண்ணாகப் பிறந்தவர்களின் கடமை என்றெண்ணி தன்னை அனுபவிக்கும் கணவனின் சுகத்தை மட்டுமே கருத்தில் கொண்டு தன்னை ஒரு சடப்பொருளாக்கி கொள்பர்களாலும் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.வன்புணர்வுக்கு உட்படும் பெண்களும் கருத்தரிப்புக்குள்ளாகி றார்கள் என்பது அதற்கு ஒரு உதாரண மாகும்.

கொஞ்சமான உண்மைச் சம்பவங்களுக்கு ஏற்றாற் போல இவ்விலக்கியம் இப்படித்தான் எழுதப்பட வேண்டும் என்பதற்கமைய,அவ்வுண்மைகளைச் சுற்றி இளங்னேகாவடிகளால் புனையப்பட்ட கதைதான் இது என சிலப்பதிகாரத்தை நோக்குவதைத் தவிர்க்க முடியவில்லை.காலம் காலம் நம்ப வைக்கப்பட்டு மக்கள் அதற்கு இசைவாக்கம் பெற்றவர்களாக மாறிவிட்ட நிலையில் சிலப்பதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்துவதே தவறு என்பதே தவறாகும்.

கோவலன் மாதவியிடம் போனதற்கும்,கோவலன் கொலையுண்டதற்கும், பாண்டிய மன்னன் சிம்மாசனத்திலிருந்து விழுந்து இறந்ததற்கும், மதுரை எரியூட்ட பட்டதற்கும் மூல காரணம் எதுவென்று ஆய்கையில் கண்ணகியின் பெற்றோர் பொய்யுரைத்தும்,மூடிமறைத்தும், கண்ணகியின் உடல் தகுதியைக் கவனத்தில் எடுக்காது கண்ணகியின் சிறுமிப் பராயத்தில் உடலுறவில் விருப்பமில்லாத ஒருத்தியைத் கோவலனுக்கு திருமணம் செய்து வைத்து கோவலனை பரத்தையர் விரும்பியாக மாற்றியமைக்கு கண்ணகியின் பெற்றோரோ காரணமாகும் என்பது எனது பார்வையாகும்.

“தாம்பத்ய உறவென்பது ஒரு ஆணும் பெண்ணும் அதுபற்றி முழுமையாக அறிந்து, மனதில் காதலும் உடலில் காமமும் கொண்டு ஓருயிராவதே“

---

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இலங்கை வரும் சீனக் கப்பல்கள்

கொண்டிந்த ஆராச்சிக் கப்பல் ஒக்டோபர் மாதம் இலங்கையின் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தரித்து நின்று ஆராச்சியில் ஈடுபடவுள்ளதாகவே இந்தியத் தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் குவாங்சோவை தளமாக கொண்டு செயற்படும் ஒரு ராட்சக் கப்பல். தற்போது தென் சீனக் கடலில் இருந்து நகர ஆரம்பித்துவிட்டது. இலங்கையை அடையும் இக் கப்பலானது இலங்கையின் தேசிய நீர் வளா ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி முகவரான நாராவின் ஆராச்சியிலும், தென் இந்திய பெருங் கடலையும் ஆய்வு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியா இப்பகுதியில் உள்ள தனது கடற்படையின் கண்காணிப்பு கப்பலை உசார் செய்வதோடு மேலும் இரு கப்பல்களை ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் இப் பகுதிக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளது.

சீனக் கப்பல்களின் தொடர் வருகையும், இந்தியா அது தொடர்பில் வெளிப்படுத்தும் கரிசனை குறித்த இலங்கை அரசாங்கத்தின் அலட்சியமும் பிராந்தியத்தில் இராஜதந்திர ரீதியிலான ஒரு முறுகல் நிலையைத் தோற்றுவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.







# புஷ்பா 2 மிரட்டலாக உருவாகி வருகிறது

புஷ்பா படத்தைத் தொடர்ந்து புஷ்பா 2 படத்திலும்அல்லு அர்ஜு/ன்உடன்ஜோடிப் போட்டு நடித்து வருகிறார் ராஷ்மிகா மந்தனா.

அவர் நடிப்பில் வெளியான படங்களிலேயே மிகப்பெரிய வெற்றியை பெற்றது அல்லு அர்ஜ/ன் நடித்த புஷ்பா திரைப்படம் தான். தமிழில் இந்த ஆண்டு விஜய்க்கு ஜோடியாக வாரிசு படத்தில் நடித்திருந்தாலும், அந்த படம் ராஷ்மிகாவுக்கு எதிர்பார்த்த வெற்றியை கொடுக்கவில்லை.

இதற்கு முன் இல்லாத அளவுக்கு அல்லு அர்ஜ/னின் புஷ்பா படத்தில் படு கவர்ச்சியாக நடிகை ராஷ்மிகா மந்தனா ஸ்ரீவள்ளி கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். மற்ற படங்களை விட ராஷ்மிகா நன்றாக நடித்தார் என்றால் அது புஷ்பா படத்தில் தான் என அவரது ரசிகர்களே கொண்டாட ஆரம்பித்தனர்.

சாமி சாமி பாடலில் பாவாடையுடன் ராஷ்மிகா மந்தனா கவர்ச்சி பொங்க நடித்தது ஒட்டுமொத்த ரசிகர்களை மிரட்டி எடுத்த நிலையில், அல்லு அர்ஜ/ன் உடன் காருக்குள் ரொம்பவே மோசமான காட்சியிலும் எல்லை மீறி நடித்திருந்தார்.

புஷ்பா முதல் பாகத்தை விட மிகவும் அதிகமான செலவில் பிரம்மாண்டமாக புஷ்பா 2 உருவாகி வருகிறது. இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனாவின் பகுதி முதல் பாகத்தை விட மிரட்டலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒரே படத்தில் ரஜினி- விஜய்?

## அரசியலில் இது எல்லாம் சகஜம் என்று சொல்வது போல் அல்ல இது



நெல்சன் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள ஜெயிலர் எதிர்பார்த்ததைப் போல் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

கோலமாவு கோகிலா படம் மூலம் இயக்குநராக அறிமுகமான நெல்சன், அடுத்தடுத்து சிவகார்த்திகேயன், விஜயுடன் கூட்டணி வைத்தார்.

சிவகார்த்திகேயனின் டாக்டர் பட வெற்றியால் தான், விஜய்யின் பீஸ்ட், ரஜினியின் ஜெயிலர் பட வாய்ப்புகளும் நெல்சனுக்கு கிடைத்தன. ஆனால், கடந்தாண்டு வெளியான பீஸ்ட் எதிர்மறையான விமர்சனங்களால் படு தோல்வியடைந்தது.


விஜய், நெல்சன் என இருவருக்குமே இந்தப் படம் பெரிய அடியாக விழுந்தது. இதனால் ஒருகட்டத்தில் ரஜினியின் படத்தில் இருந்து நெல்சன் நீக்கப்படலாம் எனவும் செய்திகள் வெளியாகின. ஆனாலும் நெல்சன் மீது நம்பிக்கை வைத்த சூப்பர் ஸ்டார், துணிந்து ஜெயிலர் படத்தில் நடித்துக் கொடுத்தார். ரஜினியின் நம்பிக்கையை மோசம் செய்திடாத நெல்சன், ஜெயிலரை சூப்பர் ஹிட் படமாக கொடுத்துள்ளார். ஜெயிலர் படத்தின் வெளியீட்டுக்கு பின்னர் பிரபல யூடியூப் சேனலுக்கு பேட்டிக் கொடுத்துள்ளார் நெல்சன்.

அதில், ஜெயிலர் படம் குறித்தும் ரஜினியுடன் பணிபுரிந்த அனுபவம் பற்றியும் மனம் திறந்துள்ளார். மேலும், ரஜினி, விஜய் இருவரது உடல் மொழி ரொம்ப இயல்பாகவும் ஒரேமாதிரியாகவும் இருக்கும். அதனால், அவர்கள் இருவரையும் ஒரே படத்தில் நடிக்க வைக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் கனவு என்றுள்ளார்.

ஆனாலும், அது அவ்வளவு எளிதானது இல்லையென்றும், கதை எழுதிய பின்னரே ரஜினி, விஜய்யை அதில் நடிக்க வைக்க முடியுமா என்பதை தீர்மானிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

# ஏய் சுழலி!!!

பலருக்கு பிடித்த பாடல்களில், கொடி படத்தில் வெளிவந்த “ஏய் சுழலி“ எனும் பாடலும் ஒன்றாகும். இசையும், பாடல் வரிகளும் எல்லோரையும் நிச்சயமாக மிகவும் கவர்ந்திருக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் கிடையாது. ஆனால்... உங்கள்



எல்லோருக்கும் இந்தப் பாடலில் வரும் அந்தச் “சுழலி“ எனும் வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று தெரியுமா?

சுழலி என்றால் எமாற்றுக்காரி என்று அர்த்தம், ஆனால் இது செல்லமாக சொல்லப்படும் “ஏமாற்றுக்காறி“ ஆகும். அடடடடா, இவ்வளவு காலமும் இது தெரியாமப் போச்சே? ஒருவரைத் திட்டுவது என்றாலும் இனி அழகாகத் திட்டுங்கள்.!



# உனக்கும் எனக்கும் இருக்கும் பழக்கம் ஒரு படம் தானா?

உனக்கும் எனக்கும் இருக்கும் பழக்கம் ஒரு படம் தானா என விஜய் கேட்டார் என பீஸ்ட் பட தோல்வி குறித்து இயக்குநர் நெல்சன் பேசியுள்ளார்.

இது தொடர்பாக யூடியூப் சேனல் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், பீஸ்ட விமர்சனங்களைத் தொடர்ந்து நடிகர் விஜய்யிடம் சார் என் மேல உங்களுக்கு எதும் கோபமா? எனக் கேட்டேன். அதற்கு அவர், படம் எடுத்தோம். சிலருக்கு பிடித்திருக்கிறது. சிலருக்குப் பிடிக்கவில்லை. நேர்மையான உழைப்பை செலுத்தினோம்.

என்னிடம் சொன்னதை படமாக எடுத்திருக்கிறாய். அவ்ளோதான். அடுத்த முறை வேறுமாதிரி படம் பண்லாம். நான் எதுக்கு உன் மீது கோபமாக இருக்கப் போகிறேன்?. உனக்கும் எனக்கும் இருக்கும் பழக்கம் ஒரு படம் தானா? நீ இப்படி என்னிடம் கேட்பது கஷ்டமாக உள்ளது. இது இல்லாவிட்டால் இன்னொரு படம் எடுக்கப் போகிறோம். அவ்ளோ தான். ஜெயிலர் வந்ததும் முதலில் அவர் தான் என்னைப் பாராட்டினார். வாழ்த்து தெரிவித்தார என நெல்சன் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.




செல்வி தரணிகா பத்மபாதனின்

பரத நாட்டிய அரங்கேற்றம்

28.10.2023 சனிக்கிழமை



சலங்கை ஒலி நாட்டிய பள்ளி அதிபர் திருமதி சாவித்திரி சரவணன். **M.A.M.Phil in dance** அவர்களின் மாணவியும்திரு திருமதி பத்மபாதன் அவர்களின் புதல்வியுமான செல்வி. தரணிகா. அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்.
28.10.2023 யேர்மனியில்
**Herne** நகரில் இடம்பெற உள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்குன்றோம்.

**28.10.2023 Gaststätte Volkshaus Röhlinghausen**
**Am Alten Hof28 | 44651 Herne Germany**

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
அனைத்து சேலைகள், பஞ்சாபிகள்,
சேலைகளுக்கான பாதணிகள் யாவும்
அதிரடி மலிவு விலையில்.
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Wuppertal நகரில்...
Asia Lebensmittel
மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை
மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மரக்கறி வகைகளுக்கும்
கடல் உணவு வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்
+49 176 62728598 | 020289012114
Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Ludwig str.87a
70197
Stuttgart
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam
Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
www.nagaselvam-remax.de


akr
VISUALIZERS
Photography
AKRVISUALIZERS
+49 162 8031647
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698